Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 08 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 19 (04-12-1992) வெள்ளிக்கிழமை ஓசை 290

## கோப்பாய் பகுதி குளத்தில் புதை பொருள் ஆராய்ச்சி

கோப்பாய் பகுதியில் 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட சில பொருள்கள் நிலத்திற்கு அடியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. கோப்பாய் வடக்கு இராச வீதிக்கு அருகாமையில் போரூட் நிறுவனத்தினால் ''நாச்சிமார்'' குளம் புனரமைக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது மூன்றரை அடி ஆழத்தில் செங்கற் சுவர்களும், கறுப்புநிற ஒருவகை களிப் பொருளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவை சுமார் 400 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மேலும் இப்பொருள்கள் பற்றிய ஆராய்ச்சியில் யாழ். பல்கலைக் கழகத்தினர் ஈடுபட்டுவருகின்றனர்

# கடற்புலிகள் தாக்கலாமென கொழும்பு நகரில் பரபரப்பு

## கரையோரப் பகுதியில் தீவிரகண்காணிப்பு

[கொழும்பு]

கடற்புலிகள் கொழும்பு நகரைத் தாக்கலாம் என்று சிறிலங்கா பாதுகாப்புப்படை உயர் அதிகாரி அச்சம் தெரிவித்ததாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது. இதே வேளை மீண்டும் புலிகளின் தாக்குதல் கொழும்பு நகரில் இடம் பெறலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் எச்சரிக்கை செய்துள்ளதைத் தொடர்ந்து கொழும்பின் கரையோரப் பகுதியில் உள்ள மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு நகரிப்புற பாதுகாப்பு வேலிக்குள் கடற்புலிகள் ஊடுருவி தாக்குதல் நடத்துவதைத் தவிர்க்கும் வகையில் மேற்குக் கரையோரங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடலில் ரோந்துப் படகுகளின் நடமாட்டமும் தீவிரமாக்கப்பட்டுள்ளது.

கடலில் படகுகளின் சந்தேகத்துக்கிடமான நடமாட்டத்தைக் கண்டால் உடனடியாக அண்மையிலுள்ள இராணுவ முகாம்களில் அல்லது பொலிஸ் நிலையங்களில் அது பற்றி அறிவிக்குமாறு மீனவர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசாங்கம் புத்தளம் தொடக்கம் பாணந்துறை வரையுள்ள கடல் பகுதியில் அனுமதியின்றி படகுகள் நடமாட தடை செய்வது குறித்து தீவிரமாக ஆலோசனை செய்து வருவதாகத் தெரிய வருகிறது.

கொழும்பிற்கு கடற்புலிகள் ஊடுருவ இருப்பதாக கிடைத்த

[8 ஆம பக்கம் பார்க்க]

## வடகிழக்குதனித்தனிசமஷ்டி ஐ. தே. க., சு. க. ஆதரவாம்

(கொழும்பு)

யாழ். மாவட்ட எம்.பி.சிறிநிவாசன் இனப்பிரச்சினை தீர்விற்கென முன்வைத்த வடக்கு-கிழக்குமாகாணங்களுக்கான தனித்தனிசமஷ்டிஅமைப்பிலான ஆட்சி முறையை ஐ. தே. கட்சியின் செயற்குழு வரவேற்றிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இத் தீர்வுத் திட்டம் தொடர்பான சாதகமான நிலைப்பாட்டை எடுக்கும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த வாரம் இந்த சமஷ்டி ஆட்சிமுறைத் திட்டத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோபண்டாரநாயக்கா எதிர்த்திருந்தமை சகலரும் அறிந்ததே.

## புதியதற்கொலை குழுவினர் கொழும்பிற்குள் ஊடுருவல்

### பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

புலிகளின் மற்றொரு தற்கொலைப் படையைச் சேர்ந்த குழுவினர் கொழும்பிற்குள் ஊடுருவியிருப்பதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். முதல்குழு கடந்த நவம்பர் மாதம் முதற் பகுதியில் கொழும்பிற்குள் நுழைந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

வலிமை மிக்க இந்தப் புதிய குழு முல்லைத்தீவுக் காடுகளிலிருந்து மட்டக்களப்பு வழியாகக் கொழும்பு வந்துள்ளதாக பொலிஸ் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

புலிகள் கொழும்பு புறநகர்ப் பகுதிகளிலும் ஏனைய நகரங்களிலும் தாக்குதல்களை மேற்கொள்ளக் கூடும் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பயணிகள் படகு எதுவும் மூழ்கடிக்கப்படவில்லை

### பொருள்களை ஏற்றி வந்த படகு மீதே தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடலில் கடந்த சனிக்கிழமை சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய தாக்குதலினால் படகோட்டி ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

சம்பவதினம் இரவு 9.00 மணியளவில் கிளாலிக் கடற்கரையில் இருந்த இரண்டு படகுகள் பயணிகள் எவரையும் ஏற்றாமல் புறப்பட்டுச்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பரீட்சை நிலையம் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் நடைபெற இருந்த க. பொ த. (சா/த) பரீட்சை நிலையம் யாழ். புனித மரியாள் வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இது சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது.

## கிளாலிஇறங்குதுறைநோக்கி படையினர் எறிகணை வீச்சு

பூநகரிப் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் கிளாலி இறங்குதுறையை நோக்கி ஷெல் தாக்குதலையும், கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டுள்ளனர். அத்துடன் கிளாலி கடற்பரப்பிலும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

நேற்று முன் தினம் இரவு 8.30 மணி தொடக்கம் அடுத்தடுத்து மேற்படி முகாம்களில் இருந்து ஏவப்பட்ட பத்திற்கும் மேற்பட்ட ஷெல்கள் கிளாலி இறங்குதுறையை அண்டிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனைத் தொடர்ந்து அப்பகுதியினூடான போக்குவரத்து நேற்று முன்தினமிரவு சில மணி நேரம் ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

## முகாம் தகர்ப்பில் வீரச்சாவு



வீரவேங்கை அமுதரசன்

[வவுனியா]

வவுனியா – மன்னார் எல்லையோர சிறிலங்கா இராணுவ முகாம்கள் மீது நேற்று முன்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## ஷெல் வீச்சு

(வடமராட்சி)

பலாலி சிறிலங்காஇராணுவ முகாமிலிருந்து நேற்று முன் தினம் இரவு 7 30 மணியளவில் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டிப் பகுதிகளை நோக்கி ஷெல தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

பலாலியிலிருந்து குடியிருப்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் வன்னி எல்லையில் கைப்பற்றிய ஆயுதங்கள்

வவுனியா – மன்னார் எல்லைப்பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் அதிகாலை தாக்குதலை மேற்கொண்டு கைப்பற்றிய ஆயுதங்களின் முழு விபரங்களும் வருமாறு;

★ ஆர். பி. ஜி. — 01
★ ஏ. கே. எல். எம். ஜி. — 01
★ ரி. 81 எல். எம். ஜி. — 01
★ ரி. 56 - 2 ரக துப்பாக்கி — 08
★ ரி. 56 - 1 ரக துப்பாக்கி — 05
★ ரி 56 புதிய மொடல் துப்பாக்கி — 04
★ ரி 56 பட்மொடல் துப்பாக்கி — 03
★ 40 எம். எம். பிஸ்டல் — 02
★ 60 எம். எம். மோட்டார் — 02
★ ஜி. 3 ரக துப்பாக்கி — 01
★ எஸ். எல். ஆர். துப்பாக்கி — 06
★ ஆர். பி. ஜி. எறிகணை — 08
★ 60எம்.எம் மோட்டார் எறிகணை — 65
★ 60 எம். எம். எறிகணை பூஸ்ரர் — 55
★ 40 எம். எம். எறிகணை — 02
★ ஏ கே.எல்.எம்.ஜி ரம் மகசீன் — 18
★ ஏ. கே. எல். எம. ஜி. லிங் — 1280
★ ரி 81 எல். எம். ஜி. ரம் மகசீன் — 04
★ ரி. 56 மகசீன் — 118
★ எஸ். எல். ஆர். மகசீன் — 08
★ ஜி 3 மகசீன் — 01
★ நடுத்தர ரவைகள் —30,600
★ நேற்ரோ ரவைகள் — 260
★ 5. 56 ரக ரவைகள் — 578
★ நடுத்தர காஸ் ரவைகள் — 50
★ எம். 14 ரக கிரனைட் — 14
★ எம். 73 ரக கிரனைட் — 57
★ எம். 75 ரக கிரனைட் — 18
★ ரி. என். ரி. ரக கிரனைட் — 08

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தகராக்கி, மேசைகள் லாச்சியுடன், கண்ணாடி ஹோல் சோக்கேஸ், றோனியோ இயந்திரம், வேப்பம் பலகையிலான உடுப்பு வைக்கும் அலுமாரி தொடர்பு: இல. 65 (185) பிரதான வீதி, யாழ்ப்பாணம். (3225)

### தவறிவிட்டது

30. 11. 92 யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக பச்சை நிற ஏசியா சைக்கிள் நம். 695573 அடையாள அட்டைகள் அடங்கிய பாக்குடன் தவறிவிட்டது தகவல் தருவோர் ஈழநாதம் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம்வழங்கப்படும். (3743)

### சனிநீராடு

கிரமமான எண்ணெய் ஸ்நானம் சுகவாழ்வுக்கு அவசியம் எண்ணெய் ஸ்நானத்திற்கு முந்தையோர் வழியில் .அரப்பு எலுமிச்சங்கோது, பயறு, வெந்தயம் மற்றும் மருத்துவ சரக்குகள் கொண்டு தயாரிக்கப்பட்டது, ஒலிவ் ஸ்நானப்பவுடர். அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனை ஆகின்றது.
(சி-5530 - மில்க்வைற்.

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம், றோ. க./கிறிஸ்தவம்), வர்த்தகம், விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582 Stanley Road, Jaffna. (சி-5450)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு.) தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி. (சி-5510)

## சந்திர கிரகணம்

எதிர்வரும் புதன்கிழமையன்று பின் இரவில் சந்திர கிரகணம் நிகழும். இந்தச் சந்திர கிரகணம் பின் இரவு நேரம் 3 29க்கு ஆரம்பித்து 4.37க்கு பூரண ஆரம்பமாகி பின் இரவு 5 52க்கு சந்திர அஸ்தமனத்துடன் நிறைவெய்தும் என்று திருக்கணித பஞ்சாங்க கணிதர் வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் கூறியுள்ளார்.

## கருத்தரங்கு

1993ஆம் ஆண்டு முதல் தமது பாடசாலைகளில் வாழ்க்கைத்திறன் பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்த இருக்கும் அதிபர்கள் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இம்மாதம் 19 ஆம் திகதி முதல் யாழ்/கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

---

சன்மார்க்கசபை – குரும்பசிட்டி
இரசிகமணி, இலக்கியச்செல்வர் கனக.செந்திநாதன்

## பதினைந்தாவது நினைவு தினம்

இடம்:- கம்பன் கோட்டம், நல்லூர்.
காலம்:- 06-12-1992 ஞாயிறு காலை 9. 00 மணி
தலைவர்:- கலாகேசரி - ஆ. தம்பித்துரை.

### நினைவுப் பேருரை

மரபின் முன்னிலையில் இரசிகமணி
கவிஞர் . இ. முருகையன் அவர்கள்.

### கருத்தரங்கு

இன்றைய சூழ்நிலை - மக்கள் நலன் - அறிவியல் - படைப்பாளிகள்,
ஏ. ரி, பொன்னுத்துரை, வைத்திய கலாநிதி- எம். கே. முருகானந்தன், ஐ, சாந்தன், செம்பியன் செல்வன்,
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க, விஸ்வநாதன்,
பிரசார செயலாளர்.
(3736)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்
1984-02-10
விண்ணில்
1992-11.06

தெல்லிப்பழையைச் சோந்த
### அமரர் ரி.பி.பத்மநாதன் அவர்கள்
[ரி. பி. மாஸ்டர்]

06-12-1992 ஞாயிற்றுக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டி வீட்டுக்கிரியைகளிலும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

'சிவபதி'
வன்னியசிங்கம் வீதி,
(துரைவீதி ஊடாக)
தாவடி வடக்கு,
கொக்குவில்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்
மருமகன்.

(சி/5525)

---

## அகன்றிடா நினைவுகளில் ஆண்டு நான்கு



தாயின் மடியில்
22 — 05 — 1944

தமிழீழ மண்ணில்
04 — 12 — 1988

### திரு.நா. கருணானந்தசிவம்
அவர்கள்

கொண்ட இலட்சியம் நெஞ்சினில் ஏந்தி.
மாறிடாத கொள்கை மனதினிலே கொண்டதால்
வஞ்சகப்பேய்கள் உன் நெஞ்சை கிழித்தனவோ,
தம்பியின் பாதையே சரியெனக் கொண்டதால்
உன் சரீரம் எங்கும் குண்டுகளைப் பாய்ச்சினரோ,
பைந்தமிழில் பற்றுற்றுப் பாரதனில் பண்புடை,
ஆசானாய் அவதரித்த உன்னை, பாதகப்
பச்சோந்திக் கும்பல்கள் பழிதீர்த்துக் கொண்டனவோ,
நீ மறைந்து நான்காண்டு நகர்ந்திடினும் நகரவில்லை
உன் நினைவு,
உன் மரணம் அஸ்தமனமல்ல; நாளை விடிவிற்கான
அத்திவாரம்.

''பூம்புகார்''
காங்கேசன்துறை.

- குடும்பத்தினர்
(3728)

---

## அறிவித்தல்

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம்

அன்புடையீர் !

எதிர்வரும் 1992-12-18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு இலக்கம் 21 மேல்மாடி, நவீன சந்தையில் அமைந்துள்ள யாழ். வர்த்தகர் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு அன்புடன் அழைக்கிறேன்.

நிகழ்ச்சி:

★ முன்னை நாள் தலைவரை நீக்கியதற்கான காரணத்தைத் தெரியப்படுத்தல்.

க. மு. பத்மநாதன்
உப செயலாளர்
(3739)

---

## சேவைநலம் பாராட்டும்

அறுபதாவது
பிறந்த நாள் வாழ்த்தும்



இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் உப அதிபர்

### திரு.க.வை. தனேஸ்வரன்

அவர்கள் ஆற்றிய அளப்பரிய சேவையைப் பாராட்டுவதோடு சகல நலன்களுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

வணிக மாணவ மன்றம்
யா/ கனகரத்தினம் ம.ம.வி
(3744)

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1992-12-04

1984ஆம் ஆண்டு இதே தினத்தில், மணலாறு - ஒதியமலைப் பகுதியில், சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 27 தமிழ் விவசாயிகள்.

மன்னாரில், சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 106 - தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில், சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு பருத்தித்துறைப் பகுதியில் இந்தியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

றேகன்/வெள்ளை (சோமசுந்தரம் விஸ்ணுபாலன் - புலோலி - பருத்தித்துறை - யாழ் )

தையிட்டிப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

கண்ணன்

1988ஆம் ஆண்டு தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட -

நாட்டுப் பற்றாளரான -

ஆசிரியர் நாகமுத்து கருணானந்தசிவம் (காங்கேசன்துறை - யாழ்.)

புன்னாலைக்கட்டுவனில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

1989ஆம் ஆண்டு அம்பாறை - தம்பிலுவில் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப் பிரிந்த -

தீசன் (சுபமாலை மேகராசா - கண்ணகிபுரம், அக்கரைப்பற்று - அம்பாறை)

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பில், சிறிலங்காப் படையினர் - மற்றும், தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டுப் பின்னர், வாழைச்சேனையில் வைத்து தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட - அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மன்னார் - அகத்தி முறிப்புக்கும், பொற்கேணிக்கும் இடையில், சிறிலங்காப்படையினரின் விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கப்டன் பாடலன்/ஜிம்மால் (பூபாலபிள்ளை ஜெகதீஷ் புதுக்கொலனி, செங்கலடி - மட்டு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-5528)




அந்தநாள் ... 1988 ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் ஆறாம் நாள் அது ஒரு கொடியநாள். இரவு 9.30 மணி வானொலி கேட்டுக் கொண்டிருந்தார் நேசனின் தந்தை. சில மாதங்களாக சமூகப் பணிகளில் தன்னை முழுமையாக அற்பணித்திருந்தார். சமூக நலன் விரும்பிகளைத் தேசத்துரோகிகள் என்றும் விரும்புவதில்லை. விசப்பூண்டுகள் விடுதலையை விரும்புமா? சில நாட்களாக இந்திய இராணுவத்துடன் இணைந்து தியாகலிங்கத்தின் உயிருக்குக் குறி வைக்கத் தொடங்கினர்.

டொக்... டொக்... டொக் கதவு தட்டப்பட்டது. தட்டும் ஓசையில் வித்தியாசத்தை உணர்ந்த நேசனின் தந்தை, தற்பாதுகாப்புக்காக இரவில் வைத்துக் கொண்டு படுக்கும் கொட்டனைக் கையில் எடுத்துக் கொண்டார் ...

ஆரது?...சற்று குரலை உயர்த்தி அதட்டலாகக் கேட்டார் பனார்...கதவில் உதைந்தனர்

கதவு திறந்ததும் சரமாரியாகத் துப்பாக்கிக் குண்டுகள் வந்தன. நேசன் தாயை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டான். கண்முன்னே தந்தை சுருண்டு விழுந்தது அவன் பிஞ்சு உள்ளத்தில் ஆழப்பதிந்தது. அழுவதற்குக்கூட அவனுக்குச்சக்தி இருக்கவில்லை... காலங்கள் ஓடின.

க. பொ. த. சாதாரண தரத்தில் படித்துக் கொண்டிருந்த நேசனுக்குப் படிப்பில் சிந்தனை பதியவில்லை. அமைதிஅவனிடம் குடிகொண்டது. தாயின் கண்ணீரைத் தினமும் பார்த்தான். படிப்பும், பரீட்சையும் அவனுக்குச் சுமையாகத் தோன்றியிருக்க வேண்டும் ஓராண்டு முன்னரே க. பொ. த சாதாரண தரப்பரீட்சையை எழுதி முடித்தான் 1989ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 21 ஆம் நாள் ரீயூசனுக்குச் செல்வதாகத் தாயிடம் சொல்லிவிட்டு புறப்பட்டான். அன்று அவன் திரும்பவில்லை அவனிடம் இருந்து தாய்க்கு ஒரு சில வரிகளடங்கிய கடிதம் மட்டுமே வந்திருந்தது.

அன்புடன் அம்மாவுக்கு,

அப்பா செத்து இன்றுடன் எட்டு மாதமும் பதினாறு நாட்களுமாகிறது. அப்பாவைச் சுட்ட துரோகக் கும்பலில் இன்று ஒருவன் மட்டுமே எஞ்சியுள்ளான் அவனையும் அழித்து அத்துரோகிக்கு இணைநின்ற சிப்பாய்களையும் அழிக்கவே புறப்பட்டுள்ளேன். நீங்கள் இனி அழக்கூடாது. மலரப்போகும் தேச விடுதலையில் உங்கள் மகனின் பங்கும் நிச்சயம் நிலைத்து நிறகும்.

இப்படிக்கு
உங்கள் மகன்
மோகன்பாபு

## களத்தில்நின்ற காலம்

மாதங்கள் பத்து உருண்டு மறைந்தன. நாற்பது போராளிகளுடன் வீட்டுக்கு வந்தான் நேசன்.

'அம்மா எல்லாருக்கும் சாப்பாடு போடு' தாயோடு அன்று அவன் பேசிய வார்த்தைகள் இது மட்டும்தான். பின்னர் நண்பர்கள் சிலரை கண்டு கதைத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டான். அந்த வார்த்தைகளை மட்டும் நெஞ்சில் மீண்டும் மீட்டிப் பார்த்துக் கொண்டு வரும் போராளிகளுக்கெல்லாம் சமைத்துப் போட்டுக் கொண்டேயிருந்தாள் தாய்.

நேசன் சண்டைகள் பலவற்றில் பங்குகொண்டான். அவனின் நினைவிலும், சொல்லிலும், செயலிலும் துணிவு மிகுதியாக இருந்தது. ஐந்து தடவைகள் கடுமையான காயங்களை சுமந்துகொண்டான். வேகமும், விவேகமும் அவனிடம் மிகுதியாக இருந்ததால் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவில் இணைக்கப்பட்டான். வீரம் மட்டுமன்றி வாகனம் ஓட்டுவதில் மிகுந்த சாதுரியத்தை கொண்டிருந்ததால் சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவுத் தலைபதியின் மனத்தையும் ஈர்த்துக் கொண்டான்.

நேசன் சண்டை களங்களில் பெருவெற்றியாக அமைந்த இரண்டைக் குறிப்பிடலாம். ஒன்று முல்லைத்தீவில் பதினேழுக்கு மேற்பட்ட இராணுவத்தைக் கொன்று 50 கலிபர் துப்பாக்கி உட்பட பல நவீன ஆயுதங்களை கைப்பற்றிய சண்டை. அடுத்து நடந்தது தட்டுவன் கொட்டியில் முப்பதுக்கு மேற்பட்ட இராணுவக் காவலரண்களை தகர்த்து சாதனை நிலைநாட்டிய சண்டை.

முல்லைத்தீவுச் சண்டைக்கு மகன் வந்திருப்பதை அறிந்த தாய் அவனைப் பார்க்கும் ஆசையில் அவன் செல்லும் பாதையில் காத்திருந்தாள் மகனுக்காக புதிதாக எடுத்த சாரமும், சேட்டும் கொண்டு சென்றிருந்தாள். வழியில் ஒரு போராளியை சந்தித்து "தம்பி நான் நேசனின் அம்மா; அவனை ஒருக்கால் பார்க்க ஆசையாயிருக்குது; நான் நிற்பதாய் சொன்னால் வரமாட்டான்; ஒரு ஆள் முக்கிய அலுவலாய் உன்னை சந்திக்க வந்திருக்குது என்று சொல்லி அவனை வரச் சொல்லுவீர்களா" என வேண்டினாள் அந்தப்போராளியும் அவ்வாறே அறிவித்தான். சிறிது நேரத்தில் நேசன் அவ்விடத்துக்கு வந்தான். "ஆரது என்னட்ட அலுவலாய் வந்தது" என்று கேட்டதும் மறைந்து நின்ற தய் வெளியே வந்தாள்.

"நீங்களேம்மா ஏனிப இஞ்ச வந்தனீங்கள் இப்பிடியெண்டால் இனி இந்தப் பக்கமும் என்னைக் காணமாட்டியள்"

மகனின் வார்த்தைகளைக் கேட்ட தாயின்கண்களிலிருந்து நீர்த்துளிகள் திரண்டு விழுந்து சிதறின

"நான்போறனப்பா இந்தா உனக்கெண்டு ஒரு சாரமும் சேட்டும் எடுத்து வைச்சிருந்தனான்" என்று அவற்றை அவனிடம் நீட்டினாள்.

"அம்மா, இயக்கம் எங்களுக்கு நிறைய சாரமும் சேட்டும் வாங்கித் தருது. உதைக் கொண்டு போய்வையுங்கோ" என்று அவன் கூற, வாய்புதைத்து கண்ணீரோடு திரும்பினாள் அவனின் தாய். தாய் மீது அன்பிருந்தும் அதற்கு மேலாக தாய்மண்ணில் அன்பு வைத்திருந்தான் நேசன்.

தென்னங்கீற்று நிறைந்த அழகிய கிராமம் அலம்பில்.

பீரங்கிகளாலும், எறிகணைகளாலும், விமானக் குண்டுகளாலும் அக்கிராமம் சப்பித் துப்பபட்டுக் கிடந்தது. ஆறு ஆண்டுகளாய் பட்டையால் இறைத்து வளர்த்த தென்னை மரங்களை புல்டோசர்கள் தள்ளி ஒதுக்கிக் கொண்டிருந்தது.

R C.L. பீரங்கியிலிருந்து வெளிக்கிளம்பிய எறிகணைகள் பேரிரைச்சலுடன் குமுளமுனைக் கிராமத்தை நோக்கிப் பறந்தன. செல்லும் திசையில் பத்துப்பன்னிரண்டு தென்னை மரங்களை அறுத்து வீழ்த்தி வெடித்தன. தர்மம் தவறிய சிங்களச் சிப்பாய்களுக்கு இந்த வளத்தைப் பற்றி என்ன புரியும்.

சீனாவிலிருந்து பெற்ற 'சுப்பசோனிக்' குண்டு வீச்சு விமானங்கள் குறிதவறி வீசிய குண்டில் ஐம்பது பனை மரங்கள் அடியோடு பெயர்த்தெறியப் பட்டுக் கிடந்தன. தமிழீழத்தில் தென்னைகளையும் பனைகளையும் நாசமாக்க சிங்கள



கப்டன்
## நேசன்

அரசுக்கு கோடி ருபாக்களை செலவிட வேண்டியுள்ளது.

ஒன்றன்பின் ஒன்ற கவிசப்பட்ட ஆட்லறி எறிகணைகள் மேய்ப்பாரற்ற ஆட்டு பட்டியொன்றினுள் விழுந்து வெடித்தது. காலவேறு தலைவேறாய் அவை சிதறின.

யுத்தப்பிரதேசத்தை பார்வையிட்டுக் கொண்டுவந்தான் நேசன். தனது பிறந்தகம் தீயில் வெந்து சாம்பராய்க் கிடப்பதைக் கண்டான் "என்னைச் சுமந்துகொண்டுபோக ஒரு வாங்குகூட இல்லாமல் எரிச்சுப் போட்டாங்கள் மச்சான்" என சக போராளிகளுக்கு கூறிக்கொண்டான்

முதல் நாள் நடைபெற்ற சண்டையில் நேசனுக்கு காயம் ஏற்பட்டிருந்தது காயம்பட்டும் சிகிச்சைக்கு செல்ல மறுத்துவிட்டான். "என்ர காணிக்குள்ள நிண்டோண்டு ஆமி எனக்கு சுடவோ மச்சான்" என்று கூறி காயத்துக்கு கட்டுப்போட்டு அடுத்த நாள் சண்டைக்கு தயாராகி நின்றான்.

களத்திலே மகன் நிற்பதை கேள்வியுற்று காண ஓடிவந்தாள் தாய். மழையில் நனைந்துகொண்டு மக்களற்ற அபாயமான பகுதிக்குள் வந்த தாயைக்கண்டு "ஏனம்மா இந்த மழையில் நனைஞ்சு கொண்டு இஞ்ச வாறாய்" என்று அன்பாக ஆனால் கண்டிப்பு தொனிக்க கேட்டுவிட்டு சிரித்தான். கன்னத்தில் கட்டுப்போட்ட காயம் தாய்க்கு தெரியக் கூடாதென்பதற்காக கைகளால் அதை மறைத்துக் கொண்டே சிரித்தான். முந்நூறுநாள் சுமந்து பெற்ற தாய்க்கு மகனின் உடலை அளவிட முடியாமலாபோகும். கண்ணீரோடு மகனிடம் விடை பெற்று திரும்பினாள். இரவு கண்ட கனவு அவளை தடுமாற வைத்துக்கொண்டிருந்தது.

நேசன் அன்றைய சண்டைக்கு தன் அணியைத் தயாராக்கிக் கொண்டான். எதிரியின் குண்டுவீச்சில் கால்கள்சிதறிய பசுமாடொன்று நடக்க முடியாத நிலையில், கண்களால் நீர் ஆறாகப்பெருக நேசனை நோக்கியது. 'மிருகங்களுக்கு கூட எங்கள் மண்ணில் சுதந்திரமில்லை" என்று கூறி நெட்டுயிர்த்தான் நேசன்.

"மச்சான் நேசன்; என்ன, உங்கட வீட்டையும் ஆமி இறக்கிப போட்டாங்களாம்" என சகபோராளி ஒருவன் கிண்டலாகக் கேட்டான்.

"வீடென்ன மச்சான் வீடு; வீட்டத்தான் பேந்தும் கட்டிக் கொள்ளலாம்; எத்தினை பெடியள் செத்திட்டாங்கள்; அவங்களையெல்லாம் திரும்பப் பெறலாமே"

நேசனின் உறுதியான வார்த்தைகள் இது.

தந்தையைக் கண்முன்னே சுட்டுக்கொன்றதைக் கண்டவனல்லவா நேசன்.

எதிரியின் அழிவு எந்தளவிற்கு அதிகமோ அதில்தான் அவன் அமைதியைக்கண்டான். தன்னுடைய தந்தையைப் போல எத்தனை தந்தையர், தங்கையர், தம்பியர், அன்னையர் அழிக்கப்பட்டிருப்பர்......

சில மணிநேரத்தில் சண்டை தொடங்கியது. பறிபோன மண்ணும், மக்களும் கண்ணில் தெரிய, தன்னைமறந்துஆவேசமுடன் சுட்டுக்கொண்டிருந்தான் நேசன். சில கணந்தான்; நெற்றியில் குண்டு பாய்ந்தது. தன் மண்ணைக் கைகளால் இறுகப்பிடித்தபடி கண் மூடினான் நேசன்.

- மணலாறு விஜயன்

## வீழ மட்டும்

## பாதை மாறேன்...

நடுநிசி நேரத்தில்...
நடுங்கும் பனிக்குளிரில்
கொடும் பகையரைக்கொல்ல - எங்கள்
படையணியொன்று
மடையுடைத்த வெள்ளமென...
மகிழ்வுடனே விரைகிறது...

கையிலே கருவியைத் தூக்கி...
கட... கட... வென ரவையேற்றி ..
நெஞ்சிலே குண்டு கட்டி...
நிலவு வருமுன்னே நெடுந்தூரம்
புறப்பட்டோம்......

வயல் வெளிகள்!...
வானளாவிய மரங்கள் ... ஆனாலும்
வானத்தில் இருள் முகில்கள்:
இடையிடையே ... சரசரப்புக்கேட்டு...
மட...மட... வென சிறகடிக்கும் வெண்கொக்குகள்
கணநேரந்தான் ... கண்டு விட்டோம்.

இலக்கை கண்டு கொண்டோம் ... எதிரியை
தாக்க நிலையெடுத்தோம்...
தாக்கினோம் ... எதிரியை
தலை தெறிக்க ஓடச்செய்தோம் - ஆனாலும்
குட்டிப்புலியொன்று குண்டுபட்டுச் சாய்ந்தது.
சென்ற முறை தீரர் தினத்திலே — என்னுடன்...
சிரித்து மகிழ்ந்திருந்தான் - அவன்
பெற்றவளைக் கண்ட போது
கட்டியணைத்து அன்னை முத்தமிட்டதைக்
கண்டேன்...

இந்த முறை தீரர்நாளில் அந்த
அன்னையவளைக் கண்டால்...
என்ன பதிலுரைப்பேன்...
ஏக்கமுற்ற தாயவட்கு ... ஏற்றமான
பதில் யாதோ...?
கண்டு கொண்டேன் ... நின்
குண்டுபட்டுப்போன ... வேங்கையின்
வெற்றிடத்தில் நானொன்றுரைப்பேன் ... நான்
வீழுமட்டும் பாதைமாறேன் ... வீறுகொள்வேன்
வீரரவர் வழிதவறேன்.

செ. திருமாறன்
மன்னார்.

சிறுகதை

# சொந்தமண்ணில்

- நா. மனோன்மணி

நந்திக் கடல்வெளி அந்த அதிகாலைப் பொழுதிலே அமைதியாக இருந்தது. அடிக்கடி பறவைகள் சிறகடிக்கும் ஓசையும், குரல் ஓசையும் மாத்திரம் கேட்டுக் கொண்டிருந்தது. வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் அதிகாலைப் பூசைமணி காற்றோடு கலந்து வந்தது

கரையோரமாக எருமைகள் மேய்ச்சலில் மும்முரமாக மூழ்கியிருந்தன. அந்தக் காலைவேளையில் சிறியவீச்சு வலைகளுடன் இரண்டு மூன்று பேர் கடலுக்குள் இறங்கிச் செல்வதைப் பார்த்துக் கொண்டு கரையோர விளாமரத்தடியில் நின்ற இராசன் மெல்ல நடக்க ஆரம்பித்தான்.

ஒரு பத்து வரியத்திற்கு முந்தி இந்த நந்திக்கடல்வெளி அமளிதுமளிப்படும். இறால் பிடிகாலம் தொடங்கி விட்டால் ஒரே திருவிழாக் கூட்டம்போல இரவு நேரத்திலயும் சூல் லாம்புகளோட இறால்பிடிகாரரும், இறாலை வாங்குவதற்குப் போட்டி போடும் வியாபாரிமாரும், லொறிகளும். இவர்களை நம்பி உருவாகும் தேத்தண்ணிக் கடைகளும்.

பெருங்கடல் தொழில் செய்யும்சம்மாட்டிமார் கூட நந்திக் கடல் நீரேரித் தொழிலுக்கு போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். இலட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வாற தொழிலை விட ஆருக்குத்தான் மனம் வரும்.

இனக்கலவரம் தொடங்கியதுக்குப் பிறகுஇந்த தொழில் செய்யிறது பெரிய கஷ்டமாய்த்தான் போட்டுது. நந்திக்கடலுக்கு கிழக்குப் பக்கமாக முல்லைத்தீவு மெயின்ரோட்டோட இருக்கிற ஆமிக்கேம்பில இருந்து பார்த்தால் கடலுக்கை சனம் நிக்கிறது தெரியும் உடனடியாய் செல்லடிக்க தொடங்கி விடுகிறாங்கள். இந்த முறை வற்றாப்பளை கோயிலடியில நிண்ட செஞ்சிலுவைச் சங்க வானுக்கும், சனத்துக்குமே செல் அடிச்ச கொலைகாரப் பாவிகள் கடலுக்கை இறங்கிற சனத்தை விடவா போறான்.

அந்த நாளையில உழைக்கோணும், இலாபமெடுக்க வேணும் எண்டு தொழில் செய்த ஆட்கள் ஏதோ வயிற்றுப்பாட்டைப் பாப்பம் எண்ட யோசனையோட பயந்து பயந்து கடலுக்கை இறங்குதுகள்.

பறவைக் கூட்டம் வேகமாகச் சிறகடிக்கும் ஓசை கேட்டு தலை நிமிர்ந்து பார்த்தான் இராசன். சிவப்பு நிற சொண்டும், சிவந்த நீளமான கால்களுமாக கொக்குக் கூட்டமொன்று பறந்து போய் நீரில் இறங்கியது. இதுவரை நீரில் நீந்தித் திரிஞ்ச பறவைக் கூட்டம் எழும்பிப் பறந்து தூரத்தில் போய் விழுந்து நீந்தத் தொடங்கியது. என்னவோ எங்கட உள்ளூர் பறவையினங்களுக்கு இந்தச் சிவப்பு வண்ணக் கொக்குகளைப் பிடிப்பதில்லை. ஒவ்வொரு வருசமும் ஒரு 'பருவகாலத்தில இங்க வந்து போற வெளிநாட்டுப் பறவைகள் தங்கட உணவிலயும், சுதந்திரத்திலயும் பங்கு போடுகிறது இதுகளுக்குப் பிடிக்காமல் போனதில ஆச்சரியமில்லை.

இராசன் சிரித்துக்கொண்டான் முன்னைபருவ காலத்தில மீன்பிடிக்காக இங்கவாற தென்னிலங்கை மீன்பிடிகாரர்களைப் பார்த்துநாங்களும்இப்படித்தானே யோசிச்சம் கடைசியாய்அவர்கள்எங்கடை நாட்டையே ஆக்கிரமிக்க நினைச்சதால தானே இந்தப்போராட்டம்- கஷ்டம்எல்லாம்ஒவ்வொருவருசமும் இலட்சக்கணக்கில தொழில் நடக்கிற இந்தக் கடல் நீரேரிப் பிரதேசம் இப்பதுக்கத்தில மூழ்கினவீடு மாதிரி காட்சியளிக்குதுஇறால்பிடிக்கு தேவையான வலைகள், குளிரூட்டி கொழும்புக்கு அனுப்புவதில உள்ள பிரச்சினைகள் எல்லாமாகச்சேர்ந்து சனத்தின்ர வாழ்க்கைமுறைகளையும் தொழில் வாய்ப்புக்களையும் மாத்திப் போட்டுது.

''அண்ணை . அண்ணை''

என்ற குரல் கேட்டு திரும்பினான் இராசன், பக்கத்து வீட்டுக்குமார் உங்கட அம்மா உங்களை கெதியாய் வரட்டாம் அண்ணை எண்டு சொல்லிக் கொண்டே விளாத்தி மரங்களை நோக்கி ஓடினான் விளாம்பழம் பொறுக்கிற அவசரம் ஆறுதலாக நிண்டு கதை சொல்ல நேரமில்லை.

இராசன்சாக்குப்' ப் பையை எடுத்துக் கொண்டு தான்கட்டியிருந்த நண்டுக் கூடுகளைப் பார்ப்பதற்காக கடலுக்கை இறங்கினான். கரையேறிய போது பையிலே ஒரு பத்து கிலோ நண்டளவில்இருந்தது.. பரவாயில்லை ஒரு இரு நூற்றைம்பது ரூபாயாவது கிடைக்கும்.சீவியப்பாட்டுக்குப் பரவாயில்லை. இப்ப இதுதானேசீவியத்திற்கு வழிகாட்டுவது சைக்கிள் வியாபாரிகள் ஒவ்வொரு நாளும் காலையில வந்து நண்டைவாங்கிப் போறதால விக்கிறதுக்காக அலைகிற சிரமம் குறைவு.

கரையோரத்தில நிக்கிற புளியமரத்தடியில வரிசையாக சைக்கிள்கள் பெட்டி கட்டியபடி நிற்கிறதைகண்டஇராசன் தன்னிட்ட வழமையாகநண்டு வாகிற றொசானிடம்நண்டை கொடுத்திட்டுவீட்டைநோக்கி நடந்தான்.

பரம்பரையாக எங்கடசனம் எவ்வளவு நிம்மதியாக வாழ்ந்ததுகள் இப்ப எல்லாம் திசை மாறிப்போச்சு. கடலுக்கை இறங்கினாலும் கெல்க்காரன் வாறானோ எண்டு பார்க்க வேண்டிக் கிடக்குது வீட்டில திண்டாலும் பொம்பருக்குப் பயப்பட வேண்டியிருக்கு எப்ப எங்களுக்கு இந்தஆக்கினைகள் தொலையுமோ தெரியேல்ல யோசித்தபடி நடந்தான்.

முற்றத்திலே நின்ற மாமரத்தடியில் சைக்கிள் ஒண்டு நிக்கிறதைக் கண்டவுடன் குமார் என்னை அவசரமாக அம்மா வரச் சொன்னதாக சொன்னவன் சீ... நான்அயட்டைக்குணமாக இருந்திட்டன் யார் வந்ததோ என்றபடியே படலையைத்திறந்து உள்ளே போனவன் மாலுக்கை இருந்தவரைக் கண்டதும் திகைத்துப் போனான்.

'சுந்தரமண்ணை எப்ப வந்தனீங்கள். நீங்கள் கொழும்பு போய் விட்டியல் இனி இங்க வரமாட்டியள் எண்டல்லோ கதைச்சவங்கள் நான் இனி உங்களை எப்பக் காணப்போறன் என்று யோசிச்சுக்கொண்டிருந்த நான்'' சொல்லியவாறே அருகில் போன இராசனை நிமிர்ந்து பார்த்தார் முகம் சோர்ந்து போய் கிடந்தது.

''அப்படி இந்த மண்ணை விட்டுப் போக மாட்டன் தம்பி வீடு வாசல் வலையள் படகுகள் எல்லாம் நாசமாய் போச்சுது இனி என்ன செய்யிறது எண்ட யோசனையோட கொழும்புக்குபோனன் அங்கத்தைய நிலவரம் எனக்கு தோதுப்படவில்லை'''உங்கட தம்பி ஆக்களோட கதைச்சனீங்களோ அண்ணை'' சுந்தரமண்ணையின் இரண்டு தம்பிமார் வெளி நாட்டில வேலை செய்கிறார்கள்.

''ஓமடா தம்பி அவங்கள் என்னையும் வரட்டாம் நான் செத்தாலும் இங்கதான் உங்களோட ஒருக்கா கதைச்சுப் போட்டு போகத்தான் வந்தனான் எண்டு சொன்னன் அவர்களுக்கு மனம் சரியில்லை கண்டியோ. பிறகு காசு அனுப்பினாங்கள் நான் கஷ்டப்படாமல் இருக்க வேணுமாம்'' அப்படி அவங்கட யோசனை''

சுந்தரமண்ணை பெரிய கடல்தொழில்சம்மாட்டியார். செம்மலைக் கிராமத்தில பெரிய அளவில இயந்திரப் படகுகள் வைச்சு பல தொழிலாளருக்கு தொழில் கொடுக்கிற மனுசன். என்மீது நல்ல பிடிப்பு தொழில் நடக்கிற காலத்தில் மேற்பார்வைக்காகவும் வாடியில பொறுப்பாக நிற்க நம்பிக்கையான ஆள் எண்ட நினைவோடயும் என்னைக் கூட்டிப் போக மறப்பதில்லை. அப்படிப்பட்ட மனுசன் சோர்ந்து போய் இருக்கிறதைப் பார்க்க கவலையாக இருந்தது.

''அப்ப என்னண்ணை செய்யப் போறியள்'' இராசனின் கேள்விக்கு சிரித்தபடியே பதில் சொன்னார் சுந்தரம்.

''என்னத்தையடா தம்பி செய்யிறது அவங்கள் அனுப்பின காசைவைத்து கொழும்புச் சாப்பாட்டுக் கடைக்காரருக்கும் படுத்தெழும்பிற எட்டுக்கு எட்டடி அறைக்கும் குடுக்கிறதோ, என்ன கஷ்டமெண்டாலும் எங்கட மண்ணில எங்கட சனத்தோட இருக்கிறது தான் சுகம் சுதந்திரம் எண்டு வந்திட்டன்''

''திரும்பதொழில் செய்யிற யோசனையோ அண்ணை''

''ஓமடா தம்பி இரணைப்பாலையில எனக்குத் தெரிஞ்ச பெடியன் ஒருத்தன் இருக்கிறான் அவனோட சேர்ந்து தொழிலைச் செய்யலாம். என்னோட தொழில் செய்த பெடியளும் அந்தப்பக்கத்தில இருக்கிறார்கள் அவர்களும் பாவம் தானே அதோட உன்னையும் கூட்டிப் போவம் எண்டுதான் வந்தனான்''

தான் தன்ரசுகம் எண்டு எத்தனையோ பேர் ஓடித்தப்பிற இந்த நாளையில தன்ர மண்ணில தன்னைநம்பித்தொழில் செய்தவர்களோட வாழற வாழ்க்கையை பெரிதாக மதிக்கிற சுந்தரமண்ணையைப் போல ஆக்கள் இருக்கிற மட்டும் எங்கட தமிழீழம் யாருக்கும் பணிஞ்சு போகாது.

அம்மா தேநீரைக்கொண்டு வந்து என்னிட்டயும் சுந்தரமண்ணைக்கும் தந்துவிட்டு சுந்தரமண்ணையிடம் அவரது சுகசேமங்களை விசாரிக்க தொடங்கி விட்டா.

படலைதிறக்கும் ஓசையோட ''பிள்ளை பார்வதி'' என்னடி செயயிறாய் எண்ட கேள்வியோட சின்னக்குட்டி அப்பு தோளிலகிடந்த பிஞ்ச வலைத் துண்டையும் பறியையும் முத்தத்தில கழட்டி வைச்சிட்டு மாலுக்கை வந்தார்.

' யாரடா பொடி இது புதிசாய் கிடக்குது'' அப்புவின் கேள்விக்கு அம்மா பதில் சொன்னா... அது அப்பு செம்மலைச் சம்மாட்டியார் சுந்தரம்...

இராசன் மெதுவாக சுந்தரமண்ணைக்குச் சொன்னான். ''இடி இடிச்சா என்ன. மழை பெயதால் என்ன. இல்லை செல்லடிச்சாலும் தான். இந்தக் கிழவன் நந்திக் கடலுக்க மீன் பிடிக்கிறத மட்டும் விடாது'' அது சின்னக்குட்டி அப்புவின்ர காதுக்கும் கேட்டிட்டுது.

என்னடா பொடி சொல்லுறாய் நந்திக் கடலுக்க மீன் பிடிக்கக் கூடாதோ எவனடா எங்களை மறிக்கிறவன். நான் என்ர ஏழு வயதில தொழிலுக் கெண்டு நண்டு பிடிக்கவும் இறால் தடவிப்பிடிக்கவும் வெளிக்கிட்டவன். சாகுமட்டும் இந்தத்தொழிலை விட மாட்டான்.

சுந்தரமண்ணை அப்புவைக் கேட்டார். ''ஏனப்பு உங்களைப் பிள்ளைகள் பார்க்காதுகளோ''

''ஏனடா தம்பீ என்ற கை கால் ஒய்ஞ்சு போட்டுதே இந்தக் கடலிலே இறங்கி நாலு மீனை இறாலைப் பிடிச்சால் தான் எனக்கு சந்தோசம் இவ்வளவு காலமும் இந்த நந்திக் கடல் தான் என்னை வாழ வைத்தது வாழறதும் உந்தக் கடலை நம்பித்தான். பிள்ளையளுக்கு சுமையாக வாழ எனக்குவிருப்பமில்லையடாதம்பி. பிள்ளையள் எண்டு சொல்லிறியே அந்தப் பிள்ளைகளை வளர்த்ததே இந்தக் கடலின்ர உதவியாலதானே''

''அப்புகோவிக்காலதயுங்கோ இந்த வயசானகாலத்தில ஏன் கஷ்டப்பட வேணுமெண்டு தான்'' சுந்தரமண்ணை கேள்வியை முடிக்க முன்னம் அப்புஆவேசத்தோடு சொன்னார்.

''பிஞ்சுகளடா தம்பி பிஞ்சுகள். தூக்கேலாமல் துவக்கையும் தூக்கிக் கொண்டு ஆமிக்காரனை வரவிடக்கூடாதெண்டு பனி, வெயில் பாராமல் காவல் காத்துக்கொண்டு திரியுதுகள் ஏன் தெரியுமோ இந்த மண்ணில உள்ள பாசமும் மானத்தோட வாழ வேணும்எண்டதுடிப்புந்தான். நானும் இந்த மண்ணிலதான் பிறந்தனான். வயசு போனாலும் எனக்கும் அந்தக்குணம் இல்லாமல் போகுமெண்டு நினைச்சியோடா பொடி''

வாயடைச்சுப்போய் அப்புவையே பார்த்தவாறு இருந்தார் சுந்தரமண்ணை. ''என்னடா தம்பி யோசிக்கிறாய் மானத்தோட தன்ரகையால தானே உழைச்சு சாப்பிட வேணும். எனக்கும் என்ரகிழவிக்கும் இந்த பிஞ்ச வலைத் துண்டும் பறியும் போதும் ராசா... சரி நேரம் போகுது நான் வரப்போறன்'' கூறியவாறே வலையையும், பறியையும் தோளில் போட்டுக் கொண்டு அப்பு நடந்தார்.

சுந்தரமண்ணையும் ... சின்னக்குட்டி அப்புவும்இரண்டுவிதமான மனிதர்கள் சுந்தரமண்ணை விரும்பினால் வெளிநாட்டுக்கு போகலாம் இல்லையெண்டால் கொழும்பிலேயே சகோதரங்கள் அனுப்பிற காசை வைச்சுக் ,கொண்டு சுகமாக சீவிக்கலாம். அப்பிடி எத்தனை சனம் அந்தச் சீவியத்துக்கு. ஆசைப்பட்டு ஒடுதுகள் அதையெல்லாம் வெறுத்து சொந்த மண்ணில தான் சுகதுக்கம் எண்டு திரும்பிவாறார் சின்னக்குட்டி அப்பு தன்ர காலில தானே நிக்கவேணும் எண்டதுடிப் போட இந்த வயசான காலத்திலயும் கடலுக்கை இறங்கிறார். ''இதெல்லாம் எங்கட மண்ணுக்கும்தமிழினத்துக்கும் உரித்தான தன் மான உணர்வுகள் இந்த உணர்வுகள் இருக்கிறவரைக்கும் எங்கட மண் அடிமையாகாது.

## இவ்வார அறிமுகம் ஒளி

போதைப் பொருள்பாவனையைக் கண்டித்து போதைப் பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு முயற்சியாக போரூட் நிறுவனத்தின் யாழ். கிழக்கு கிளையினால் வெளியீடப்படும் ஒளி சஞ்சிகை தற்போது வெளிவந்துள்ளது பன்னிரண்டு பக்கங்களைக் கொண்டு இலவச வெளியீடாக வந்துள்ள இந்த இதழில் பெரும்பாலும் வளரும் இளைய தலைமுறையைச் சேர்ந்த மாணவர்களின் ஆக்கங்களை தரிசிக்க முடிகின்றது. போதைபொருள் தடுப்புக் கல்விச் செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக வெளிவரும் ஒளி எதிர்காலத்தில் ஒளி வெள்ளம பாய்ச்சும் என்பதற்கு ''உலகளாவிய ரீதியில் சிந்தியுங்கள்; நீங்கள் இருக்கும் இடத்திலேயே செயற்படுங்கள்'' என்ற வாசகம் கட்டியம் கூறுகிறது எனலாம்.

## அறிந்து கொள்ளுங்கள்

- உலகிலேயே மிகப்பெரிய புகையிரதப் பாதை அமெரிக்காவில் தான் உள்ளது. இதன் நீளம் எவ்வளவு தெரியுமா? இரண்டரை இலட்சம் மைல்களாகும்.
- சாதாரணமாக மனிதனின் இதயம் ஓராண்டு காலத்தில் 7, 70 000 இலிருந்து 16 00 000 கலன்குருதியை உடலில் பாய்ச்சுகின்றது.
- கல்கத்தாவில் உள்ள தாவரவியல் பூங்கா தான் ஆசியாவிலேயே மிகப் பெரிய பூங்காவாகும்.
- உலகில் மிக உயரமான கலங்கரை விளக்கம் ஜப்பானில் உள்ளது. யோகோஹாமா என்ற இடத்தில் உள்ள இதன் பெயர் 'ஸ்டீல் டவர்' லைட் ஹவுஸ் என்பதாகும்.
- உலகின் மிகப் பெரிய மியூசியம் அமெரிக்காவின நியூயோர்க் நகரில் உள்ளது. ''அமெரிககன் மியூசியம் ஒப் நேச்சுரல் ஹிஸ்டரி'' என்பது இதன் பெயராகும்.

கி. செல்மர் எமில்
ஊர்காவற்றுறை.

# கல்லறை மீதொரு சத்தியம்

இரவு 12. 02.
27. 11. 92 - தமிழீழ மாவீரர் நாளின் ஆரம்ப நிமிடங்கள்.

'எங்கே எங்கே ஒரு தரம் விழிகளை இங்கே திறவுங்கள்....
ஒரு தரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்...'

இந்த மண்ணில் வாழுகின்ற எத்தனையோ பெற்றவர்கள், உறவினர்களின் ஏகோபித்த ஏக்கம் ஒன்று கலந்து ஒரே குரலாய் ஒலிக்க-

கல்லறைகளின் முன்னால் தீப ஒளியிலே விழிநீர் பெருக்கி, இந்த மண்ணின் மைந்தர்களைப் பெற்றவர்கள், உறவினாகள், அந்தப் புனித சன்னிதானத்திலே - மாவீரர் துயிலும் இலலத்திலே - உணர்வுகள் சங்கமித்து நின்று,

'இழிவாக வாழோம் இனிமேலும் ஓயோம்'
என உறுதி எடுத்த காட்சி-
உலக வரலாறு இதுவரை கண்டிராதது.
இந்த மண்ணுக்கு மட்டுமே உரித்தானது.
பெருமை கொள்வோம் தலை நிமிர்வோம்-
நாங்கள் தமிழர்கள்-

'புத்தம் சரணம் கச்சாமி' சொல்லிக் கொண்டே யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுகிறான எங்கள் எதிரி.

'தர்மம் சரணம் கசசாமி'சொல்லிக் கொண்டே அதர்மத்தை விதைக்கிறான் அவன்.

இந்த அநியாயங்களுக்கெதிராக எழுந்தது தான் எங்கள் போர்.

நவம்பர் 26ஆம் திகதி நுணாவிலில். தாங்கள் பெற்ற மூன்று செல்வங்களை ஒரே சமயத்துல் இழந்தனர் ஒரு பெற்றோர். அந்த உயிர்களைப் பலி கொண்டது - எதிரி வீசிய குண்டு.

எமது எதிரி எப்படிப்பட்டவன் என்பதற்கு இது ஒரு சாட்சி.

காலங்காலமாய் இதைத்தான் அவன் செயது வந்திருக்கிறான். இன்றும் இதையே செய்கிறான். எமது மண் மீட்கப்படும் வரை, இனியும் இதையே தான் செய்வான.

இதைத் துல்லியமாக உணர்ந்து கொண்டுதான் எங்கள் மாவீரர்கள் 'சுதந்திரம்' என்ற உன்னத உரிமைக்காகத் தங்கள் உயிர்களை விலையாக்கினார்கள்.

இந்த மண்ணுக்கு உரமாகிப் போனவர்களும்...
இந்த தேசத்தின் காற்றோடு கலந்தவர்களும...
எங்கள் கடலிலே அலையோடு சங்கமமாய்ப் போனவர்களும்...
எத்தனை எத்தனை அர்ப்பணிப்புக்கள், எத்தனை எத்தனை பரிமாணங்களில்...?

இவர்கள் - இந்த மண்ணிலே பிறந்தவர்கள். பெருமை கொள்வோம். தலை நிமிர்வோம்.

எத்தனை துயரக்கதைகள். எத்தனை சோகங்கள்..

துயரங்களை நெஞ்சில் சுமந்தபடி வந்த பெற்றவர்கள் தங்கள் பிள்ளைகளையே நேரில் பார்ப்பதான ஒரு உணர்வுடன் அந்த நள்ளிரவிலே புனிதமான அந்த ஆலயத்தில் கூடி நின்றார்கள்.

இரவு 10 30 மணிக்கே ஒரு அம்மா தன் பிள்ளையைப் பார்க்க அங்கே வந்து விடுகிறா. ஆசையோடு செய்து, பிள்ளைக்கெனக் கையோடு கொண்டு வந்ததின் பண்டங்களை மடியிலிருந்து அவிழ்த்து, முன்னால் அமர்ந்து - ஒவ்வொன்றாய் எடுத்துப் பிள்ளையின் முன் வைக்கிறா நெடு நேரம் அப்படியே அமர்ந்திருக்கிறா. கண்களை அகற்றாமல் நினைவுக் கல்லைத் தன் பிள்ளையாகவே நினைத்து-ஆவலுடன் பார்த்தபடி இருந்த அந்தத் தாயின் கதை, இந்த மண்ணின் சோகக்கதை

இரு கைகளிலும் மலர்களை ஏந்தியபடி ஒரு அம்மா வருகிறா. பிள்ளையின் பாதங்களில் பவித்திரமாய் அவற்றை வைத்து, இரு கைகளாலும், தலையிலிருந்து பாதம் வரை தன் 'பிள்ளை'யைத் தடவுகிறா. அப்படியே தன் பிள்ளையைப் பார்த்தபடி நீண்ட நேரமாய்...

இந்தத் தாயின் கதை இந்த மண்ணின் சோகக் கதை.

கல்லறை ஒன்று - நிறைய மலர்கள் தூவப்பட்டிருக்கின்றன. பெரிய மலர் மாலை ஒன்றும், பெற்றவர்களும் உடன் பிறப்புக்களும் சுற்றிவர அமர்ந்து - கல்லறை மீது தலை சாய்த்துக் கிடக்கின்றனர். மலர்கள் மட்டுமன்றி, அவர்களின் கண்ணீரும் அந்தக் கல்லறையை அர்ச்சிக்கின்றது. அந்த அணைப்பிலே அவர்கள் ஆறுதல் அடைந்தார்கள்.

இந்தக் குடும்பத்தின் கதை-இந்த மண்ணின் சோகக் கதை.

'கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்...
சாவரும் போதிலும் தணலிடை வேகினும் சந்ததி தூங்காது...'

ஆம், சந்ததிகளும் அங்கே சத்தியம் செய்தன.

மாவீரர்களுடைய மழலைச்செல்வங்களும் அன்று உறுதி எடுக்க வந்திருந்தன.

மாவீரன் ஒருவனுடைய போராளி மனைவி கணவனுடைய நினைவுக் கல்லின் முன்னால் - நிறைந்த உறுதியுடன் நின்று தீபம் ஏற்றுகிறார். வரிப்புலிச் சீருடையுடன் நின்ற அந்தப் பெண்ணுடைய கையிலே அவர்களுடைய ஒரு வயதுக்குழந்தை. குழந்தையின் உடலைத் தழுவியிருந்தது.

வரிப்புலிச் சீருடை!

உணர்வுகளை உசுப்பிவிட்ட இந்த நிகழ்ச்சி - இந்த மண்ணின் கதை. உலக சரித்திரம் தன்னில் பெருமையோடு பதிவு செய்து கொண்ட புதிய வீரக்கதை இது.

ஒரு அம்மா அவருடைய பிள்ளைகளில் நான்கு பேர் மாவீரர்கள். ஒருவன் போராளி. மட்டக்களப்பைச் சேர்ந்தவர் தென் தமிழீழ நிலைமைகளால் இங்கு வந்து வசிப்பவர் அன்று மாவீரர் துயிலும் இல்லத்துக்கு வந்திருந்தார்.

''என்ரை பிள்ளையளின்ரை சமாதியைத் தேடித்தான் நான் போக வேணும் எண்டில்லை... இந்தப் பிள்ளையளும்என்ரைபிள்ளையள்தான்...'

எத்தனை பெரிய உண்மை இது?

நான்கு பிள்ளைகளை இந்த மண்ணுக்கு உரமாக்கிவிட்டு, ஐந்தாவது பிள்ளையைக் களத்தில் விட்டு நின்று எல்லாப் பிள்ளைகளும் என் பிள்ளைகள் தான்என்று சொல்லுகின்ற பரந்த உள்ளங்கொண்ட அந்தத்தாயின்வீரம் இந்த மண்ணின் சொத்து.

இந்த வீரத்தினால் தான் தமிழனின் மானம் உலக அரங்கிலே உயிர்ப்புடன் நிற்கின்றது.

சாதி, மத, வர்க்க வேறுபாடுகள் என்றநிலைகளையெல்லாம் கடந்த ஒரு உன்னதமான சமத்துவ நிலை அந்த நள்ளிரவிலே அந்தசன்னிதானத்தில் தன்னை அடையாளம் காட்டி நின்றது நாங்கள் அனைவரும் 'தமிழன்' என்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற மேலானஉணர்வு எல்லோர் மனத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டது.

எதிர்கால சந்ததி நிம்மதியாய் வாழவேண்டுமானால் இந்தமண் விடுதலை பெறவேண்டும். அந்த விடுதலைக்கான புனித வேள்வியிலே நெய்யாகிப்போன எங்கள் மாவீரர்கள், இந்த மண்ணின் புதல்வர்கள், தமிழ் மக்கள் அனைவரினதும் புதல்வர்கள் 'தமிழீழம்' நிச்சயமாய் வென்றெடுக்கப்படும் என்ற அசையாத நம்பிக்கையில் நிம்மதியாய்- நித்தியமாய்- உறங்கிக் கொண்டிருக்கும் அந்தப் புனிதர்களின் சன்னிதானத்தை அனைவரும் சென்று பாருங்கள்-

இனம் வாழ உயிர்கொடுத்த உத்தமர்களாகிய எங்கள் பிள்ளைகளின் இலட்சியக் கனவுக்கு உருவம் கொடுக்கும் வரலாற்றுக் கடமை எங்களுடையதே என்பதை அந்த, சன்னிதானம் எமக்கு உணர்த்துவதைப் புரிந்து கொள்வீர்கள்.

உலக வரைபடத்தின் எங்கோ ஒரு மூலையில், சிறிய- மிகச்சிறிய- புள்ளியால் ஒரு தேசம்.

அதில் வாழும் ஒரு இனம்.
அது-தமிழீழ தேசம்
அந்த இனம்-தமிழினம்.

இவற்றைப் பற்றியே இன்று உலகம் முழுவதும் வியப்போடு பேசுகிறது.

இதற்கான காரணம், எங்கள் மாவீரர்களும்அவர்களுடையஅற்புதமான தியாகங்களுமே

அவர்கள் சிந்திய இரத்தத்தால் எங்கள் விடுதலைவரலாறு பெருமை பெறுகிறது.

அந்த வீரமறவர்கள்-மாவீரர்கள்-துயிலும் இல்லத்தை ஒவ்வொரு தமிழ் மகனும் தரிசிக்க வேண்டும்.

அப்போது தான்,

சுதந்திர தமிழீழம் ஒன்று தான்-அது மட்டுமே - தமிழின விடிவுக்கான தீர்வு என்ற யதார்த்தத்தை ஆத்மார்த்தமாக ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

ஏனெனில்,
தமிழன் நன்றிகொன்றவன் அல்ல.
நம்பிக்கைத் துரோகியுமல்ல.

அங்கே நீங்கள் ஒரு தரம் சென்று அவர்கள் துயில்வதைப் பாருங்கள்...

இங்கொரு தாயகம் வென்றிடுவோம் என சத்தியம் செய்யுங்கள்.

**-சாவித்திரி அத்துவிதானந்தன்**

# கதகளி ஆடல் நிகழ்வு-ஒரு பார்வை

கதகளி நிகழ்ச்சிகளில் காலி நாற்காலிகள் மட்டுமே அதிகமிருந்த காலகட்டம் அது. கலைச்செல்வன் ஏ. சுப்பையாவினால் நாற்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான கதகளி என்ற கேரள ஆடல் வடிவம் எண்பதுகளுக்குப் பிறகு மிகவும் குறுகிக் கொண்டுவிட்டது என்பது உண்மை. ஆனால் கடந்த சனியன்று பிற்பகல் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நாட்டியக் கலைமணி பாவிலுப்பிள்ளை வின்சென்ற் வழங்கிய கதகளி ஆடல் நிகழ்வு இந்தச் சூழலை உடைத்துக் கொண்டு கூத்தம்பலம் ஏறியுள்ளது. இன்றைய வரலாற்று நிர்ப்பந்தச் சூழலின் நடுவே மூத்த கலைஞர் வேல் ஆனந்தனின் ஆடலமைப்பிலும், நெறியாள்கையிலும் உருவான இந்த ஆடல் நிகழ்வு நிச்சயமாக ஒரு புதிய அனுபவம்.

வின்சென்றின் ஆடல் நிகழ்வில் அரங்க வணக்கத்தைத்



கலைமணி பா.வின்சென்ற்

தொடர்ந்து தோடயம் இடம் பெறுகிறது. தோடயம் மகா கவி வள்ளத்தோளின் சம்பிரதாயப் பார்வையில் ஆலயத்துக்குள் ஆடப்படுவது. இந்த ஒதுக்கலில் இருந்து தோடயத்தை அரங்கிற்குக் கொணர்ந்த வேல் ஆனந்தனின் ஆடல் ஆசிரியர் குரு கோபிநாத்தைப் பின்பற்றி வின்சென்ற் இதனை அவைக்காற்றியுள்ளார். ஆக, வின்சென்ற் குரு-சிஷ்ய முறையைத் தொடர்ந்துவரும் காவியத்தைத் தான் செய்திருக்கிறார்.

அடுத்து வரும் வடிவம் புறப்பாடு சீர்ப்பிரமாணத்துக்கு (தாளம்) அமைய ஆடல் இடம்பெறுகிறது. இநதப் பகைப்புலததில் வேல் ஆனந்தனின் ஆடல் அமைப்பில், சம்பிரதாயப் பார்வைகளுக்கு மாறுபடாமல் புதிய உத்தியாக வின்சென்ற் தனி ஆடல் முறையில் (Solo Dance) ஆடுவது வீண்போகவில்லை. பரதக் கலையில் அலாரிப்பு, ஜதிஸ்வரம் போல் தோடயம், புறப்பாடு- இவை இரண்டிலும் அபிநயத்துக்கு இடமில்லை. திருத்தத்துக்கு அழுத்தம் தரப்படுகிறது. ஏற்புடைய இடங்களில் அபிநயத்தைப் புகுத்தியிருந்தால் பார்வையாளர் ஆடலுடன் இன்னும் ஒன்றியிருப்பார்கள். ஒரே பொருள் சொல்லும் விதங்கள் பலவிதமாக இருக்கலாம். கேரளத்தில் வேஷ்டி கட்டுகிறார்கள். நாமும் கட்டுகிறோம். ஆனால் அவர்கள் போல் நாம் கட்டுவதில்லையே!

மேளப்பதம் உருப்படியைப் பரவசம் கலந்தமகிழ்ச்சியோடு ஆடுகிறார் வின்சென்ற் ஆடுபவரின் கற்பனை வளத்துக்கும் செழுமைக்கும் ஏற்ற ஆடல் வடிவம் இது.

தரப்பட்ட வரம்பு மட்டத்துக்குள்ளேயே காரைக்கால் அம்மையாரின் திருவாலங்காட்டுப் பதிகத்தை 1981இல் வேல் ஆனந்தன் மேளப்பதத்தில் வெளிப்படுத்திய உருப்படியையே வின்சென்ற் வெளிப்படுத்தியுள்ளார் எனத் தெரிகிறது. யார் செய்தார் என்பதைவிட, என்ன செய்யப்பட்டது என்பதிலேயே கருத்தைச் செலுத்தினால் கதகளியின் ரிஷி மூலமான கேரளத்தில் இது வரை கையாளப்படாத வடிவத்தை வின்சென்ற்கையாள்வதில் ஒரு திருப்தி. இதில் புதிய பார்வைகள் சாத்தியமாகின்றன.

கருப்பொருளினூடே வின்சென்றின்ஆடல் சீராகஅமைகிறது ஒரு முறையல்லபலமுறை பார்க்கலாம். இசைக்கருவிகளான சுத்த மத்தளத்தையும், செண்டையும் பார்வையாளர் மனதில் பதிவு செய்து கொள்ளவேண்டிய தேவையை உணர்ந்து அவற்றை அரங்கில் முழங்கியது வரவேற்பதற்குரியது.

சங்கீத உருப்படியான வர்ணத்தில் ஒரு நிகழ்ச்சி. சிவ பெருமானின் மெய்ப்பாடுகள் ஆடப்படுகின்றன. பொதுவாக ஆடல் வகைகளில் கையாளப்படாததான வர்ணத்துக்கு அபிநயம். நெருப்பில் குளிர்காய்வதைப் போல் இருந்த பார்வையாளர்-

''மண்ணுலகில் செய்த
பாவம் போக்கவே
விண்ணவனே மீண்டும்
வாராயோ - இங்கு
(பல்லவி)

(6ஆம் பக்கம் பார்க்க)

ஆடல் ஆசான் வேல்ஆனந்தனின் மாணவர் நாட்டியக் கலைமணி பாவிலுப்பிள்ளை வின்சென்ற் கடந்த சனியன்று சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் கதகளி ஆடல் நிகழ்வை வழங்கினார் இதற்கு வேல்ஆனந்தன் ஆடல் அமைத்து நெறிப்படுத்தியுள்ளார். உதவி - நாட்டியக் கலைமணி கமலா பரராஜசிங்கம் இறுதி நிகழ்ச்சியாக கீதா உபதேசம் என்ற வேல்ஆனந்தனின் ஆடலுடன் பொன்மாலைப்பொழுது இனிதுமுடிவுற்றது.

- மதன் -

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)

411/1 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## கல்வி ஆண்டு 1993

## ஆண்டு 4 முதல் O/L வரை

★ சனி, ஞாயிறு வகுப்பு

★ மாலை வகுப்பு

**ஆரம்பம்:**

**06-12-92 ஞாயிறு காலை 9 மணி**

| | |
|---|---|
| கணிதம் | - பாஸ்கரன், M. சிறிதரன், M. தனபாலன் |
| விஞ்ஞானம் | - J.R. சூரி, J. J. கொலின்ஸ், S. P. சோதி |
| ச. கல்வி | - K. S. முத்துலிங்கம் |
| தமிழ் | - தங்கவேல், குழந்தைவேலு |
| ஆங்கிலம் | - மனோரஞ்சன், இராசலிங்கம் |
| வர்த்தகம் | - விக்கி |

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-5519)


# கதகளி

ஈழமண்ணில் நாம் பிறந்து
தவிக்கும் வேளை
மீள வழிவகுத்துத்
தாராயோ - இறைவா''
(அனுபல்லவி)

என்ற காரை சுந்தரம்பிள்ளையின் சாகியத்துக்கு வின்சென்ற் ஆடஆரம்பித்ததும் நெருப்பில் கையைச் சுடடுக்கொள்வது போன்ற உணர்ச்சியில் மிதக்கிறார்கள். இப்பதத்தில் ஆடலும் பாடலும் இணையும்போது கலாம்சம் துலாம்பரமாகின்றது. வின்சென்றின் அபிநயங்களின் விஸ்தரிப்பு பாராட்டுதற்குரியது. தமிழினத்தின் துயரத்தையும், வேதனையையும் அபிநயத்து ஆடி, இனத்தை இரட்சிக்க இயேசுவை வேண்டி நிற்பது அலாதி. கதகளி இந்துமதம் சார்ந்த பக்தியைத்தான் வெளிப்படுத்தும் என்பதல்ல அதில் மக்களின்சமகாலப்பிரச்சினைகளையும், கிறிஸ்து பக்தியையும்கூட வெளியிட முடியும்என்பதினை வாக்கியகாரர் காரைசுந்தரம்பிள்ளையும் ஆடலமைத்த வேல் ஆனந்தனும் நிரூபித்துள்ளார்கள்.

கதகளிக்கு ஒரு தனித்துவம் - கேரள பாரம் பரியமும், பண்பாட்டுக்கே லமும் உள்ளன என்பதினைப் பதிவதற்காகவோ. என்னவோ ரெளவுத்திரத்தில் மகாகவி வள்ளத்தோனிஸ் கல்யாண செளகந்திகம் இடம் பெறுகிறது.

இறுதி நிகழ்ச்சியான நாதத்தில்லானா ஒரு பரீட்சார்த்த முயற்சியென்று அதை ஆக்கியவர்களால் தெரிவிக்கப்படுகிறது கர்நாடக சங்கீதத்தில் உள்ள தில்லானா போல் ஒரு சாகித்திய உருப்படி சேர்க்கப்பட்டுள்ளது. மௌனகுரு வழியாகக் கிடைத்த மட்டக்களப்பு பிராந்திய நாட்டார் இசையும், கதகளியும் இணைத்து நாதத்தில்லானா என்ற வடிவம் அமைந்துள்ளது. புதிசு செய்யும் போது 'பரீட்சார்த்த முயற்சி' என்று சொல்லிக் கெ ள்வது ஒரு 'பாஷன்' ஆகிவிட்ட காலம் இது எனவே உதய சங்கர், ராம் கோபால், சாந்தா ராவ் கதகளி ஆட்ட உத்திகளை தமது ஆக்கங்களுக்குப் பாவித்துளனனர். ருக்மணிதேவி, மீராளினி, சாராபாய் ஆகியோர் கதகளி ஆட்ட வடிவங்களை வேறு வடிவங்களோடு இணைத்து நாட்டிய நாடகங்களை உருவாக்கி வெற்றிகண்டுள்ளனர். இந்த நிலையில் இனியும் ஒரு பரீட்சார்த்தமா?

தவிரவும், பரதம் முதல் அனைத்து ஆடல் கலைகளிலும் இப்போது பெண்களின் ஆதிக்கக்கொடி பறக்கிறது இந்தச் சூழலில் வின்சென்ற் தன் வலக்காலைத் தூக்கி வைததிருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது அவருக்கு நல்ல ஆழமான எதிர்காலம் உண்டு

## கீதா உபதேசம்

ஆடல் நிகழ்வின் இறுதியில் மேலதிக நிகழ்வு என்ற அறிமுகத்தில் ஓர் பின்னிணைப்பாக கலைஞர் வேல் ஆனந்தன், திருமதி சோபனா கலாநாதன் ஆகியோர் இணைந்து கீதா உபதேசம் என்ற ஆடல் வடிவத்தை வழங்கினார்கள். கீதா உபதேசம் பலமுறை அவைக்காற்றப்பட்டதென்றாலும், அத்தி பூத்தது போல் என்பார்களே, அது போல் நீண்ட இடைவெளிக்குப் பிறகு அளித்திருக்கிறார். சுவைக்கும்படியாகவே இருந்தது. நட்டுவாங்கம் இல்லாமல் கீதா உபதேசம்'செய்யப்பட்டுள்ளது' தன் திறமையைக் காட்டும் அளவுக்கு வேல் ஆனந்தன் ஆடினாரோ, என்னவோ. இந்நிகழ்வில் ஆடலமைப்பிலும் நெறியாள்கையிலும் உதவியாக இருந்த நாட்டியக் கலாமணி கமலா பரராஜசிங்கம் நட்டுவாங்கம் செய்திருக்கலாம் என்கின்றனர் சுவைஞர்.

குரு வேல்ஆனந்தனையும், சிஷ்யர் வின்சென்னையும் ஒப்பிடும்போது, சிஷ்யன் இன்னும் குருவை விஞ்சவில்லை. வேல் ஆனந்தன் கொடி கட்டிப் பறக்கிறார் என்றாலும், வின்சென்ற் ஆலாய் பறக்கவில்லை என்பது உண்மை

O ஆடல் நிகழ்வு வெற்றி பெறுவது என்றால் அதற்குக் காரணம் ஆடல் மட்டுமல்ல. விவரணம் என்ற 'மொழி'யினூடே சொல்ல வேண்டிய கருத்தைக் கூறுகின்றபோது அதற்கான வார்த்தைகள் எளிமையாக இருக்க வேண்டும். காட்சியின் தன்மையை அறிந்து விவரணம் செய்தால் தான் ஒட்டுமொத்தமான வெற்றி கிடைக்கும். விவரணம் என்ற மொழியின் மூலம் ஆடலின் உணர்வுகளை மக்களுக்கு உணர்த்துவதே அல்லாமல் விவரணகாரரே கலாவிமர்சகராகவும் மாறக்கூடாது.

O வேல் ஆனந்தனின் கீதா உபதேசத்தில் விவரணகாரரே அதிரடித்தளமாக ''கண்ணன் பாத்திரத்துக்கு அவன் வர்ணமான நீலத்தைப் பூசினால் எப்படி?" என்று மைக்கில் முழங்கி ரசிகர்களை அசந்துபோகச்செய்கிறார் கலா விவரணம் Cricket Commentary அல்ல என்பதை நெறியாளர் இனிமேலாவது உணர்ந்து கொண்டால் போதும். இங்கு தான் இன்னொரு சிக்கல். விவரணகாரர் தமது கதகளி மேதாவிலாசத்தை வெளிப்படுத்தியதைப் பார்வையாளரால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. தமிழாசிரியர் செய்யுளைப் பதம் பிரித்துப் பாடிக்காட்டினால் கேட்க இனிமையாக இருக்கும். பாட்டு மனதிலும் படியும் அவரே இலக்கணக் காரராக மாறுவது "டாட்டா" காட்டுவதுதான். விவரணகாரர் திருமதி சோபனா கலாநாதனை வேல் ஆனந்தனின் மகள் என்று பெருமையாகச் சொல்வதை தவிர்த்திருக்கலாம்.

O அடுத்து ஒப்பனை பாடும் குரலிலும், ஆடும் திறனிலும் இனிமை இருந்தாலும் இன்றைக்கும் ஆடல் கலைக்கு இன்றியமையாதது ஒப்பனை. பார்வையாளருக்கு ரசானுபத்தை ஊட்டுவதில் ஒப்பனைக்கு முக்கிய பங்கு உண்டு என்பதை மறந்து அவசர கோலத்தில் ஏனோதானென்று இந்த நிகழ்வில் ஒப்பனை செய்யப்பட்டுள்ளது. உப உறுப்பினர்களின் ஒப்பனைக்குப் போகிய கவனம் செலுத்தப்படவில்லை. கிளியோபெற்றாவின் மூக்குகொஞ்சம் நீளமாக இருந்திருந்தால் எகிப்து நாட்டு வரலறே வேறு மாதிரி இருந்திருக்கும் என்று டாலமி எழுதி வைத்தது ஞாபகத்துக்கு வருகிறது. ஆடல் கலையில் கண், மூக்குப்போன்றஉப உறுப்புகளும் இதயத்தை விட்டு அகல மறுக்கும் செய்தியை விளக்கும் தொழிலில் ஈடுபடுகின்றன. என்பது கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படவில்லை. கண்ணும் கருத்துமாக முகமெழுதாத காரணத்தால் (ஒப்பனை) கண் அசைவுகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)


யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

## புதிய வகுப்புக்கள்

**(ஆண்டுகள் 5,6,7,8,9,10,11)**

யாவும்

**05-12-92**

[சனிக்கிழமை]

பி. ப. 3 மணி

(சி-5521)



## I. A. B.

சர்வதேச கணக்குப் பதிவாளர் கழகம்

(லண்டன்)

**JUNE- 93**

- FOUNDATION
- INTERMEDIATE
- FINAL

ஆரம்பம்: 05. 12. 1992

★ கடந்த கால பரீட்சைகளில் மிகச்சிறந்த பெறுபேறுகள்

★ குறைந்த கட்டணம்

**School of Business Administration**

16, 3RD CROSS STREET JAFFNA

(சி/5526)



# BECON (பாரதிதாசன் கல்வி நிலையம்)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

கல்வியாண்டு - 1993

**O/L ஆண்டுகள் 9-10**

யாழ்மாவட்டத்தின் அதிசிறந்த ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை

| | |
|---|---|
| T.S.S. மோகன் | - விஞ்ஞானம் |
| MR. சதீஸ் | - கணிதம் |
| K S. முத்துலிங்கம் | - சமூகக்கல்வி |
| M R. அமரசிங்கம் | - தமிழ் |
| S. சிவலிங்கம் | - ஆங்கிலம் |
| T. ராஜன் | - வர்த்தகம் |

**ஆரம்பம் 05-12-92. 2.00 pm**

அனுமதியைமுன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்

வாரத்தில் நான்கு நாள் வகுப்புக்கள்

(சி-5504)



## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.

**O/L**

**ஆண்டு: 10, 9**

புதிய பிரிவுகள்

ஆரமபம் :

**05.12.1992**

(சனி 8.00 மணி)

| | |
|---|---|
| விஞ்ஞானம் | - தயாநிதி |
| கணிதம் | - கதிர் |
| ச. கல்வி | - கியூபேட் |
| தமிழ் | - பிரதீபன் |
| வர்த்தகம் | - ஸ்ரீ |
| ஆங்கிலம் | - சன் |

(சி-5502)



## கலை வர்த்தகக் கல்லூரி

**C. C. A.**

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

ஆண்டு: 9, 10, 11

மாலை நேர வகுப்புக்கள்

**ஆரம்பம்: 5.12.92**


| | |
|---|---|
| விஞ்ஞானம் | திரு- இரா.செல்வவடிவேல் |
| கணிதம் | திரு. மகேந்திரன் |
| | திரு. நிமலநாதன் |
| தமிழ் | திரு. ஞானதிருக்கேசன் |
| ஆங்கிலம் | திரு. T. சௌந்தர பாண்டியன் |
| சமூகக் கல்வி | திரு. வேலா |

★ சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் நான்கு நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.

★ ஏனைய பாடங்களும் நடைபெறும்.

(சி-5494) -நிர்வாகி

# கொழும்பில் வெடிக்கும் குண்டுகள்




**நிலாந்தன்**

கொழும்பிலிருந்துவந்த நண்பர் ஒருவர் சொன்னார். அவர் அங்குஆங்கிலபத்திரிகையொன்றில் பிரபல பத்தி எழுத்தாளராக இருக்கும்தமிழர் ஒருவரைச்சந்தித்தாராம். மேற்படி பத்தி எழுத்தாளர் நண்பரிடம் கொழும்பில் தமிழர்களின் பாதுகாப்புக் குறித்துக் கதைத்திருக்கிறார். இன்று கொழும்பில் நிலவும் அமைதி நிரந்தரமானதுஅல்ல என்றும், ஒருநாள் தமிழர்கள் தென்னிலங்கையிலிருந்து விரட்டியடிக்கப்பட மாட்டார்கள் என்று கூறுவது கடினம் என்றும் மேற்படி பத்தி எழுத்தாளர் கூறினாராம் கொழும்பிலுள்ள தமிழர்களின் எதிர்காலம் பற்றி அவர் எந்தஅர்த்தத்தில் இவ்விதம் சொன்னாரோதெரியவில்லை. ஆனால் சிலமாதங்களிற்குமுன்பு அராலிவெளியில் கொல்லப்பட்ட தளபதிகளின் இறுதிக்கிரியைகளின்போதும் சமீபத்தில் கடற்படைத் தளபதி கொல்லப்பட்டதன் பின்பும் கொழும்பிலுள்ளதமிழர்கள் தமது பாதுகாப்புக்குறித்து சற்று அதிகமாகக் கவலைப்படத் தொடங்கியுள்ளதாக அங்கிருந்து வருபவர்கள் கூறுகிறார்கள்.

சிங்களவர்கள் தற்கொலைப் படை வீரர்கள் மிக அருகில் இருப்பதாக உணர்கிறார்கள். தற்கொலைப் படைவீரன்மினிபஸ்களில் தங்களோடு சக பயணியாக வருவதையோ, அல்லது தங்களுடைய வாகனத்திற்குச் சமாந்திரமாகத் தற்கொலைப் படைவீரனின்வாகனம் வருவதையோ அவர்கள் திகிலுடன் கற்பனை செய்கிறார்கள். தற்கொலைத்தாக்குதலில் இருந்து கேந்திர இலக்குகளையும், முக்கியமானவர்களையும் காப்பாற்றுவதற்கு அவர்களுக்கு இரண்டு வழிகள் தான் இருக்கின்றன ஒரு வழி வடக்கிலும்கிழக்கிலும் இருந்து வரும் எல்லாத் தமிழாகளையும் சந்தேகிப்பது. அடுத்தது முக்கியமானவர்களின் மெய்க்காவலர்களும் தற்கொலைப் படைவீரர்கள் போல செயற்படுவது.

கொழும்பிற்கு வரும் எல்லாத் தமிழர்களையும் ஏற்கனவே கொழும்புப் பொலிஸ் சந்தேகத்துடன்தான் பார்க்கிறது. அங்கு விடுதிகளிலும், உறவினர்கள்நண்பர்களின்வீடுகளிலும் தங்கியிருக்கும் தமிழர்கள் இப்படிப்பட்ட குண்டு வெடிப்புக்களின் பின் கைது செய்யப்படுவது வழமையானது. இத்தகைய கைதுகள் பெரும்பாலும் பொலிஸ்காரரின் தனிபபட்ட லாபநோக்கங்களிற்காகவே செய்யப்படுவதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன. கைது செய்யப்படுவோர் அநேகமாகக் காசைக் கொடுத்து வெளியில் வருவது கொழும்பில் இப்பொழுது வாடிக்கையாகிவிட்டது. குண்டு வெடிப்புக்களால் சிங்களவரிற்குள் லாபம் அடையும் ஒரு பகுதியினர் உண்டென்றால் அது நிச்சயமாகப் பொலிஸ்காரர்கள் தான். சமீபத்தில் வெடித்த குண்டுகளின் வேரைத் தேடிச் சென்ற பொலிஸ் கொழும்பில்உள்ள மேல் நடுத்தர வர்க்கக் குடியிருப்புக்களையே வந்தடைந்தது. இத்தகைய மேல் நடுத்தர வர்க்கத் தமிழர்கள் பெரும்பாலும் பொலிஸ் நிலையங்களில் செல்வாக்கைப் பிரயோகிக்கக் கூடியவர்களாகவே காணப்படுகிறார்கள். இந்நிலையில் சிங்களவர்கள் பூரண பாதுகாப்பான கொழும்பைப் பற்றிச் சிந்திப்பது என்பது கிட்டத்தட்ட தமிழர்கள் அற்ற கொழும்பைப் பற்றிச் சிந்திப்பதற்குச் சமமானதுதான்.

பி. பீ. சி. தனது விமர்சனத்தில் கூறியதுபோல, தன்னுடைய உயிரை மாய்க்கத் தயாரான ஒரு கொலையாளியை எந்த ஒரு பாதுகாப்பு ஏற்பாடும் தடுத்து நிறுத்துவதற்கில்லை எனினும் முக்கியமானவர்களின் மெய்க் காவலரும் தற்கொலை வீரர்களைப் போன்று உயிரைத் தரச் சித்தமாயிருக்கும் பட்சத்தில் சில சமயங்களில் தற்கொலை வீரனை (இலக்கை அணுகுவதற்கு முன்பே) ஓரளவிற்குத் தொலைவிலேயே தடுத்து நிறுத்துதல் கூடும். முக்கியமானவர்களின் மெய்க் காவலர்கள் இதற்குத் தயாரா?

அட்மிரல் கிளான்சி பெர்னான்டோவின் மரணம் தளபதிகளுக்கு அவர்களது தலைநகரிலேயே பாதுகாப்பில்லை என்பதை நிரூபித்துள்ளது. இது பாதுகாப்பான இடங்களில் இருந்து கொண்டு பொலநறுவைக்கும், தாண்டிக்குளத்திற்கும் அப்பால் வறிய சிங்கள விவசாயிகளின் புதல்வர்களைப் பலியிடும் ஒரு யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கும் சிங்கள உயர் குழாத்தினரைப் பொறுத்தவரை, அவர்களது உயிர் நிலையைப் பிடித்துலுப்பிய மற்றுமொரு சந்தர்பபமதான். இவ்வுயர் குழாம் தனது தலைநகரமே தனக்குப் பாதுகாப்பற்றது ஆகியதை பீதியுடன் உணரத் தொடங்கியுள்ளது ஈழப் போரில் அவர்கள் சந்தித்த மிக மோசமான ஆண்டாக இவ்வாண்டு அமைந்து விட்டது. அடுத்தடுத்து தளபதிகளும், அதிகாரிகளும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ரூபவாஹினியில் அவர்கள் நடத்திக் கொண்டிருந்த யுத்தம் இப்பொழுது தாஜ் சமுத்திரா ஹோட்டல் வரை வந்து விட்டது.

எனினும் அவர்கள் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராகப் போவதில்லை. முன்னரும் இவ்விதம் கொழும்பில் குண்டுகள் வெடித்த போதும் வடக்கிற்கும், கிழக்கிற்கும் வெளியில்சிங்களச் சிவிலியன்கள் கொல்லப்பட்டபோதும்சிங்கள உயர்குழாம்யுத்தத்தில் தனக்குள்ள இயலாமைகளை உணரத்தலைப்பட்டது. ஆனால் இது அவர்களை சமாதானத்தை நோக்கி நிர்ப்பந்திக்கவில்லை. மாறாக யுத்தத்தில் வெளிச்சக்திகளின் உதவிகளைப் பெற்றாவது தமிழர்களை முறியடிப்பது என்றமுடிவுக்கே அவர்கள் வந்து சேர்ந்தார்கள். பொதுவாக இத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள உயர்குழாம் இருவிதமாகச் சிந்திக்கிறது- ஒன்று, புலிகளிற்குஎதிராக பழிவாங்கலாக அமையக்கூடிய கடுமையான ராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு சிங்களவர்களிற்குத் தெம்பூட்டுவது மற்றது, வெளிச்சக்திகளிடம் குறிப்பாக இந்தியாவிடம் உதவி கோருவது அல்லது இந்தியர்களின் விருப்பங்களிற்கு விட்டுக்கொடுப்பது. இதுவரைகால ஈழப் போரின்அனுபவங்களும் இதைத்தான் நிரூபித்துள்ளன. வடக்குக் கிழக்கிற்கு வெளியில் வெடிக்கும் குண்டுகளோ அல்லது சிங்கள சிவிலியன்கள் மீது தீர்க்கப்படும் வேட்டுக்களோ அனேகமாக புதுடில்லியிலே தான் எதிரொலித்திருக்கின்றன.

1985 இல் அநுராதபுரத்தில் சிங்கள சிவிலியன்கள் கொல்லப்பட்டபோதுதான், ஜே.ஆர் இந்தியாவின் 'நடுவர்' பாத்திரம் குறித்துநெகிழ்ந்துகொடுக்கத் தயாரானார். அநுராதபுரம் சம்பவங்களின் நேரடி விளைவே பெங்களூர் பேச்சுக்கள் எனறும்கூறப்படுவதுண்டு. இதுபோலவே 1987 இல் கொழும்பில்பெற்றாபஸ்நிலையத்தில் குண்டுஒன்று வெடித்து பெரும் அழிவைஉண்டு பண்ணியது. இக் குண்டு வெடிப்பின் பின்னரானநிகழ்ச்சிகளின் தர்க்கபூர்வ வளர்ச்சிதான் இந்திய-இலங்கைஉடன்படிக்கைஎன்று சில விமர்சகர்கள் கூறுவதுண்டு. பெற்றா குண்டுவெடிப்பின் எதிரொலியே வடமராட்சிமீதான ஒபரேசன்-லிபரேசன் என்று கொழும்பில் கூறப்பட்டது. இதுபற்றி அப்பொழுது ஜே. ஆரின் அமைச்சர்களில் ஒருவராக இருந்த ரிரோன் பெர்னான்டோ சிறிலங்காவில் நூறு நாட்கள்(100 days in Sir Lanka) என்றொரு நூலை எழுதியுள்ளார். அந்நூலில் பெற்றா குண்டு வெடிப்பின் நூறாவது நாளில் ஒபறேஷன்-லிபறேஷன் ஆரம்பமாகியதாக ரிரோன் பெர்னான்டோ கூறுகிறார். சில மாதங்களிற்கு முன்பு அராலி வெளியில் முக்கிய தளபதிகள் கொல்லப்பட்டபோதும் ஜே. ஆர் போன்ற சிங்கள உயர்குழாத்தினர்பிரேமதாஸ அவசரப்பட்டுஐ பி கே. எவ். ஐ வெளியேற்றி விட்டார்என்று விமர்சித்தார்கள். ஐ. பி. கே. எவ் தொடர்ந்தும் நிலை கொண்டிருந்திருந்தால் நாடு இப்படி முக்கிய தளபதிகளை இழக்கவேண்டியிருந்திராது என்று ஜே. ஆர் அவுஸ்ரேலிய வானொலிக்கு வழங்கிய விசேட பேட்டியின் போது கூறினார்.

இப்பொழுதும்சிங்கள உயர் குழாம் யுத்தம் தனதுகையை மீறிப்போவதை உணரத் தலைப்படுகிறது. இனப்பிரச்சினையில்வீங்கிய ராணுவத்தை வைத்துக்கொண்டுயுத்தத்தை குறுகிய காலக்கெடுவிற்குள் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதே அவர்களுடைய கற்பனையாக இருந்தது. அவ்வாறில்லாமல் யுத்தம் முடிவின்றித் தொடருமானால் அது இராணுவத்துள் இப்போது நிலவும் ஸ்திரமின்மைகளை மேலும் அதிகரிக்கச் செய்வதோடு ஒரு கட்டத்தில் இராணுவம் யுத்தம் பற்றி அவநம்பிக்கை கொள்வதும் தவிர்க்க முடியாததாகிவிடும். உத்தியோகப் பற்றற்ற தகவல்களின்படி இராணுவத்திலிருந்து விலகிஓடியவர்களின் தொகை 20,000 இற்கும் குறையாது என்று கூறப்படுகிறது. இராணுவத்திலிருந்து ஓடிப்போனவர்கள் இப்பொழுது தென்னிலங்கையில் சிறு சிறு குழுக்களாகக் குற்றச் செயல்களில்ஈடுபடுகிறார்கள். ஆயுதங்களைக் கையாள்வதில் பயிற்சியும், பயங்கரமான போர்அனுபவங்களும்உடைய இந்த முன்னாள் இராணுவ வீரர்கள் இப்பொழுது தெற்கில் தலைமறைவாகத் தான் வாழ்கிறார்கள். இவர்களின் தலைமறைவு வாழ்விற்கும், விரக்திக்கும், அவநம்பிக்கைகளிற்கும் தலைமை தாங்கக் கூடிய இன்னுமொரு விஜேவீர கிடைக்கும் பட்சத்தில் இவர்கள் ஒரணிப்படவும் கொழும்பிற்கு மிகவும் பாரதூரமான அச்சுறுத்தலாக வளரவும் முடியும்.

ஆனால் சிங்கள உயர் குழாமோ யுத்தத்தைத் தொடர விரும்புகிறது. அது தோல்வியை ஒப்புக்கொள்ளத் தயாரில்லை. அதைவிட வெளிச்சக்திகளோடு கூட்டுச் சேர்ந்து யுத்தத்தைத்தொடர்வதற்க்க அவர்கள் முன்னுரிமை தரக்கூடும் திரும்பவும் திரும்பவும் சாதாரண சிங்களவர்களின் மறதியின் மீதும், அசட்டுத் தனங்களின் மீதும் ஐதீகக் கற்பனைகளின் மீதும் ஆட்சி செலுத்தவே அவர்கள் விரும்புகிறார்கள். தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர்கள் பழிவாங்கலைப் பற்றியும் வெளியாரைத் துணைக்கழைப்பது பற்றியுமே சிந்தித்து வந்திருக்கிறார்கள்.

## வேலைநிறுத்தம் செய்யும் கடிகாரம்

யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரம் ஏழாம் எட்வேட் அரசர் இளவரசராக இலங்கைககு விஜயம்செய்த போது அதன் ஞாபகார்த்தமாக 1875 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அப்பொழுது மணிக்கூடு வைக்கும் நோக்கம் இருக்கவில்லை. பின் இலங்கைத் தேசாதிபதியாக இருந்த ஜேம்ஸ் லாங்டன் என்பவர் இம் மணிக்கூட்டை வாங்கி வைத்தார்.

இங்குபொருத்தப்பட்டுள்ள மணிக்கூடுகள் எப்பொழுதும் நேரத்தைக் குறைத்தே காட்டும் யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த மன்னிங் என்பவர் ஜேம்ஸ் லாங்டன் போன்றே கடிகாரங்களும்மெதுவாக ஓடுவதாககேலிசெய்வாராம்.

காலத்துக்குக் காலம் வேலைநிறுத்தம் செய்யும் இக்கடிகாரங்கள்தற்போது ... 6.05 என்ற நேரம்காட்டியபடி தனது வேலையை நிறுத்தி வைத்துள்ளது 1979 இல் மின் கடிகாரங்களாக மாற்றப்பட இருந்தன. பின்னர் அவை செயல்வடிவம் பெறவில்லை.

# கடற்படை அதிவேக படகுகள் சிறிலங்காவில் தயாரிக்க முயற்சி

## பயிற்சி பெற குழு பிரான்ஸ் செல்லும்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைக்கு தேவையான அதிவேக படகுகளை உள்ளூரில் தயாரிப்பதற்கு பயிற்சிகளை பெறுவதற்காக 18 பேர் அடங்கிய குழு ஒன்று ஒரு சில வாரங்களில் பிரான்ஸ்சுக்கு பயணத்தை மேற்கொள்ள உள்ளது.

இக்குழுவில் தொழில் நுட்ப வல்லுனர்கள், இயந்திர இயக்குனர்கள் உட்பட சிரேஷ்ட கடற்படை அதிகாரிகளும் உள்ளடங்குவார்கள் என கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

முன்னதாக பிரான்ஸ் நிபுணர்களின் உதவியுடன் அதிவேக கடற்படைப் படகுகள் கொழும்பில் தயாரிக்கப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகியமை தெரிந்ததே.

## வீரச்சாவு

### வீரவேங்கை சிறீஸ்வரன் வீரவேங்கை சுகனிதன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற திடீர் மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை சிறீஸ்வரன்/சுகி (சிவசிதம்பரநாதன் சபானந்தகுமார், தாமரைக்கேணி - மட்டக்களப்பு), வீரவேங்கை சுகனிதன் / சுதன் (பாலசுப்பிரமணியம் சற்குணம் கல்லடி மட்டக்களப்பு) ஆகிய இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## திருமதி கொப்பேகடுவவின் கோரிக்கை

## பிரேமதாசா அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும்

(பேர்லின்)

அராலி கண்ணிவெடித்தாக்குதலில் கொல்லப்பட்ட லெப்டினட் ஜெனரல் கொப்பேகடுவவின் மனைவி லலி கொப்பேகடுவவின் கோரிக்கை பிரேமதாசஅரசுக்குநெருக்கடிகளை ஏற்படுத்தும் என ஜெர்மன் வானொலி தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

இக்கோரிக்கை எதிர்க்கட்சிகளுக்கு வலுச் சேர்ப்பதாகவும் இராணுவத்திடையே உயர் அதிகாரிகளுக்கு எதிரான மனப்பான்மையை உருவாக்குவதாகவும் அரசாங்கத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கும் எனவும் இதனால் யுத்தத்தில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தது.

## நேற்று முதல் ஓய்வூதியம்

(வடமராட்சி)

பருத்தித்துறை கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களது நவம்பர் மாத ஓய்வூதியம் நேற்று முதல் பணமாக வழங்கப்பட்டு வருகின்றது.

மற்றும் டிசம்பர் மாத ஓய்வூதியவவுச்சர்கள் இவ்வங்கிக்கு வந்தடைந்துள்ள போதிலும் அவ் ஓய்வூதியத்தை விரைவில் வழங்குவதற்கு கிராமிய வங்கி முகாமையாளர் திரு. ரி கணேசமூர்த்தி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். (யோ)

## மட்டக்களப்பு கரவெட்டியில்

# இராணுவ சுற்றிவளைப்பில் மூவர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கரவெட்டிக் கிராமம் சிறிலங்கா இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது. இச் சுற்றி வளைப்பின் போது மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை மேற்படி கிராமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அக்கிராமத்தில் சல்லடை போட்டுத் தேடுதல் நடாத்தினர். தேடுதலின் போது மூவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அத்துடன் அக்கிராம மக்கள் வவுணதீவு சிறிலங்கா இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு நடைபெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து, பலர் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். ஏனையவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

## பருத்தித்துறையில் தங்குமிடவசதி

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகம் ஊடாக கப்பலில் பயணம் செய்யும் நோயாளிகள் மற்றும் பயணிகள் வசதிக்காக பருத்தித்துறையில் தங்குமிடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை பழைய தபால் அலுவலக கட்டடத்தை தங்குமிடமாக அமைப்பதற்கான ஏற்பாடுகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த இக்கட்டடம் பயணிகள், நோயாளிகள் நலன் குறித்து புனரமைக்கப்பட்டு வருகின்றன

(யோ)

## புலிகள் வன்னி எல்லையில்

| | | | |
|---|---|---|---|
| ★ ஏ கே.எல்.எம் ஜி கோல்சர் | — 20 | ★ உல்டி மெக்ஸ் - எல் எம். ஜி. பரல் | — 01 |
| ★ ஏ கே. கோல்சர் | — 30 | ★ கிளைமோர் | — 28 |
| ★ ஆர். பி. ஜி புரப்ளர் | — 08 | ★ பைனாகுலர் | — 01 |
| ★ 60 எம், எம். ஸ்கோப் | — 01 | ★ ஜெனரேற்றர் | — 02 |
| ★ 60 எம். எம். காட்ரஜ் | — 06 | ★ இராணுவ சப்பாத்து [சோடி] | — 81 |
| ★ 60 எம். எம். பியூஸ் | — 05 | ★ கமரா | — 01 |
| ★ ஏ. கே. கிளினிங் செற் | — 08 | ★ வயர் ரோல் | — 16 |
| ★ தொலைத்தொடர்பு சாதனம் | — 02 | ★ தண்ணீர்க்கான் | — 31 |
| ★ செற் பற்றி | — 04 | ★ தண்ணீர்க் கான் கோல்சர் | — 40 |

## கதகளி

(திருஷ்டி பேதங்கள்) எடுபடவில்லை. வின்சென்றின் உதட்டுக்குச் சிகப்புச் சாயத்தை அள்ளி அப்பியிருப்பது அவர் ஆளுமையைப் போக்கடிப்பது போல் இருக்கிறதே. அவர் ஏற்ற பாகங்களுக்கு இப்படி ஒரு தண்டனையா? நல்ல வேளை. அத்துடன் முடிந்தது பரவாயில்லை என்று நிறைவு பெறுகிறது.

O தொழில்நுட்பத்தைமுரண்பாடின்றிக் கொடுப்பதில் எதிர்பார்த்த அளவு வெற்றி நெறியாளருக்கு கிடைக்கவில்லை. மேடையில் நிகழ்த்தப்பட்ட பின்னணி இசை மைக்கில் சரியாக வெளியிடப்படவில்லை ரசிகப்பெருமக்களின் செவிப்பறை ஏதோ உலோகத்தகட்டினால் செய்யப்பட்டிருக்கிறதுஎன்றநினைவில் போலும் ஓசை வலிமை (Intensity) சற்றுக் கூடுதலாகவே உள்ளது. மைக வேறு அலறியதால் இசையின் ஏற்ற இறக்க பேதங்கள், லீட் கருவியின் இசை தெளிவில்லாமல் காற்றில் மிதந்து வருவது ஏமாற்றத்தைத் தருகிறது. பாடும் குரலில் இனிமை இருந்தாலும் அதை உணர முடியவில்லை. மைக் இல்லாமலே இந்த நிகழ்வு சோபித்திருக்கும்.

O தொழில் நுட்பம், ஒப்பனை, இசை ஆகியன ஒத்திசைவாக இல்லாத போது வின்சென்ற் போன்றவர்களின் வளர்ச்சியை, புகழை அடைய முடியாது தடையாக நின்று விடுகின்றன.

## கடற்புலிகள்

தகவலைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கைபற்றி ஆலோசனை நடத்தப் படுவதாகவும், 40 குதிரை சக்திக்குமேற்பட்ட வெளியிணைப்பு இயந்திரங்கள் படகுகளில் இணைக்கக் கூடாது என உத்தியோகப் பற்றற்ற முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிழமையும் படகுகள் பற்றிய முழு விபரத்தையும் பொலிசாருக்கும், கடற்படையினருக்கும் அறியத் தருமாறும் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இதேவேளை இக் கடற் பகுதியில் மீன்பிடித் தொழிலுக்கு செல்லும் கடல் தொழிலாளர் மத்தியில் அச்சம் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது

## முகாம்

தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது விழுப்புண் அடைந்த விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் நேற்று வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த வீரவேங்கை அமுதரசன் (இராசரத்தினம் கணேசலிங்கம் - 7 ஆம் வட்டாரம் - புங்குடுதீவு) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஷெல்

புப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட மூன்று ஷெல்கள் வல்வெட்டித்துறையில் தீருவில் வெளியிலும் கடல் பகுதியிலும் உடுப்பிட்டியில் சுடலை வெளியிலும் விழுந்தன.

இச் சம்பவத்தையடுத்து அப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர். ஷெல்கள் விழுந்து வெடித்த துகள்கள் பறந்து பட்டதில் ஒரு சிலவீடுகளின்கூரைப்பகுதிகள் சிறு சேதமடைந்தன. (யோ)

## பயணிகள்

சென்று கொண்டிருந்தது. இப் படகுகள்மீது சிறிலங்கா கடற்படையினர் தாக்குதல் நடாத்தினர். இதனால் ஒரு படகு மீண்டும் கிளாலிக் கடற்கரைக்கு திரும்பி வந்துவிட்டது. மற்றய படகு கடலில் மூழ்கியது. இப் படகை ஓடிச் சென்ற இரு படகோட்டிகளும் கடலில் பாய்ந்து கொண்டனர். இவர்களில் ஒருவர் கடலில் நீந்தி கரையை வந்தடைந்து விட்டார். மற்றையவர் கடலில் மூழ்கி மரணமடைந்ததாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே தினம் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட சுமார் 40 பயணிகளுடன் கிளாலிக் கடற்கரையிலிருந்துபுறப்பட்டுச்சென்ற வேறொருபயணிகள் படகு ஆபத்து எதுவும் இன்றி ஆலங்கேணிக் கரையை சென்றடைந்திருக்கிறது.

இப் படகில் சென்றவர்களுக்கு எதுவித ஆபத்தும் இல்லை என்று தெரியவருகிறது. பயணிகள் படகுகள் வேறெதுவும் தாக்குதலுக்குள்ளாக வில்லை என்றும் தெரியவருகிறது.

## கிளாலி

எனினும் இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி அறியமுடியவில்லை.

இதேவேளை நேற்று அதிகாலை 2.00 மணி தொடக்கம் 3.00 மணி வரை ஆனையிறவு முகாமில் இருந்து அதனை அண்டிய குடியிருப்புக்களை நோக்கியும் பரவலான ஷெல் தாக்குதல்களும் நிகழ்த்தப்பட்டன என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (பா)


# நாவலர் கல்விக் கழகம்

NAAVALAR KALVI KALAHAM

ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்

## ஆண்டு 1 முதல் ஆண்டு 11 (O/L) வரை புதிய வகுப்புக்கள்

ஆரம்பம் : 05-12-1992 (சனிக்கிழமை) பிற்பகல் 3 மணி

## O/L (1993)

யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

தமிழ்:- ஆனந்தன், பைரவி
விஞ்ஞானம்:- T S. S. மோகன்
கணிதம்:- பேரின்பநாதன், P. நெல்க்கன்
சமூகக்கல்வி:- K S. முத்துலிங்கம்
ஆங்கிலம்:- சிவலிங்கம்
சமயம்:- ரூபி
வர்த்தகம்:- K. சத்தி

ஆண்டு 4, 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புகள்:

தமிழ்:- சி. குழந்தைவேலு
கணிதம்: - T. S. குணாளன் (சி-5531)

அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 03.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 6912

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-4303, 26-8382, 24-5241, 26-5563, 26-4727, 26-5517, 24-9549, 42-2432, 24-5416. 22-6468.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-0991, 42-3815, 28-3029, 27-2107, 42-3239, 28-9917, 28-940.


## அறிவித்தல்

உருப்பாய் பறுபத பத்தினி அம்மன் கோயில் திருப்பணிச்சபை கலைக்கப்பட்டுள்ளது. 15-11-1992 க்கு முன்னர் இடம்பெற்ற அச்சபையின் கொடுக்கல் வாங்கலுக்கு தற்போதைய நிர்வாகசபை பொறுப்பேற்காது என்பதை அறியத்தருகிறோம்,

ஆலய நிர்வாகசபை

(3746)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.